இந்த இதழில்

செய்திக் குறிப்புக்கள்

மொழி பெயர்ப்புப் பிரச்சினைகள்
—கே. சேஷாத்ரி

தெலுங்கு இலக்கியத்தில் அண்மை வளர்ச்சி
—பி. பத்மராஜு

சிறு கதை :
என் அனுபவங்கள்
—ராஜம் கிருஷ்ணன்

தென் மொழி எழுத்தாளர் அறிமுகம் :
பாலாமணி அம்மா
டி. வி. கிருஷ்ண சாஸ்திரி
சிவராம காரந்த்

புத்தகப் பூங்கா

*

புத்தக நண்பன்
தென்மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டெர்லிங் ரோட்,
சென்னை-34.

*

ஆண்டுச் சந்தா : ரூ. 2/-
தனிப் பிரதி : 50 காசு

*

புத்தக நண்பன்

மலர் 1 இதழ் : 3 ஜூன் 1962

ஆசிரியர் :
வி. சுந்தர்ராஜ் நாயுடு, M. A., B. L., T. D.

12 JUN 1965
MADRAS

செய்திக் குறிப்புக்கள்

டிரஸ்ட் ஆதரவில் வெளியிடப்பட்ட பரிசுபெற்ற நூல்கள் :

ஆந்திர பிரதேஷ் அரசினர், டிரஸ்ட் ஆதரவில் வெளியிடப்பெற்ற, கீழ்க்கண்ட இரு நூல்களுக்குத் தனித்தனியே ரூ. 500/- பரிசாக வழங்கியுள்ளனர்.

1. **'அல்லரி கோபி அத்புத யாத்ர'**

ஆசிரியர் : வாரணசி சத்யநாராயண மூர்த்தி. வெளியிடுவோர் : அத்தேபல்லி அண்ட் கம்பெனி.

2. **'கடுபுலோ காரடி'** (மந்திர வித்தை)

ஆசிரியர் : எம். எல். சபரிராஜன்; மொழி பெயர்ப்பு : சி. ராதாகிருஷ்ண சர்மா. வெளியிடுவோர் : ஓரியண்ட் லாங்மென்ஸ்.

சிறுவர்க்கான நல்ல நூல்களை ஊக்குவிப்பதற்காக இப்பரிசுகள் வழங்கப்பட்டன. இவற்றில் முதல் நூல் 3–6 வயதுவரை உள்ள சிறுவர்க்கும், இரண்டாம் நூல் 7–14 வயதுவரை உள்ள சிறுவர்க்கும் இயற்றப் பட்டனவாகும்.

* * *

டாக்டர் ராதாகிருஷ்ணனின் அறிவுரை :

1961ஆம் ஆண்டிற்கான மிகச் சிறந்த நூல்களுக்குரிய சாகித்ய அகாதமி பரிசு

களை வழங்கிய டாக்டர் ராதாகிருஷ்ணன் தம் உரையில் எழுத்தாளருக்கென சில அறிவுரைகள் வழங்கினர். "சமூகத்தைத் துன்புறுத்திவரும் தீமைகளை உணர்ந்து, அத்தீமைகளை ஒழிப்பதற்காக மக்களின் உள்ளங்களைப் பக்குவப்படுத்தி நல்லதொரு சமூகத்தை உருவாக்குவது எழுத்தாளர்களின் முக்கிய கடமை" என்று அவர் குறிப்பிட்டார். "அச்சத்தாலும், வெறுப்பாலும் சிதைக்கப்பட்டுள்ள உலகத்தில், வேற்றுமை உணர்ச்சிகள் தலைதூக்கியுள்ள நாட்டில், தேசிய ஒருமைப்பாடும், அனைத்துலக ஒற்றுமையும் நிலைநிறுத்த இலக்கியமே சிறந்த கருவி" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர். நட்புறவு, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளல் முதலிய துறைகளில் இலக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவந்த அவர் " கடந்த 3000 ஆண்டுகளாக இந்தியாவில் படைக்கப்பட்ட இலக்கியம், இரக்கம், பரிவு ஆகிய உணர்ச்சிகளைச் சிறப்பித்து வந்தனவே தவிற வெறுப்புணர்ச்சி, பிறரை வருத்துதல் முதலியவற்றைச் சிறப்பிக்கவில்லை" என்று கூறினர்.

*　　*　　*

எழுத்தாளர் கருத்தரங்கு

இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் புதுதில்லியில் ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றில் பல இந்திய எழுத்தாளர்கள் பங்கேற்றனர். தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வழிவகைகளை ஆராய்வதற்கென கூடிய இக்கருத்தரங்கில் 1961ஆம் ஆண்டிற்குரிய சாகித்ய அகாதமி பரிசுபெற்ற எழுத்தாளர்களுட்பட பல சிறந்த இந்திய எழுத்தாளர்கள் பங்கேற்றனர். உரிமைப் போராட்டத்தின்போது இருந்துவந்த பொதுவான தேசிய நோக்கம் தற்பொழுது இல்லாதிருப்பதே, சிதைவு மனப்பான்மை நாட்டில் வளர்ந்து வருவதற்குரிய முக்கிய காரணம் என்பதைப் பல எழுத்தாளரும் ஒப்புக்கொண்டனர். இந்தக் குறையைப் போக்குவதற்கு நாட்டு மக்களுக்கு உயிர்ப்பூட்டும் இலட்சியத்தைக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் கூறினர்.

தமிழ் எழுத்தாளர் பெருமன்ற மாநாடு

அகில இந்திய தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் முதல் மாநாடு மே மாதம் 19, 20ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. பேராசிரியர் அ. சீனிவாசராகவன் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். மத்திய அரசின் விஞ்ஞான ஆராய்ச்சி, கலை அலுவல்கள் அமைச்சரான பேராசிரியர் ஹுமாயூன் கபீர் மாநாட்டைத் துவக்கி வைத்தார். அவர் தம் துவக்க உரையில் பிறரைப் புரிந்துகொள்ளல், பரிவு உணர்ச்சிப் பாலங்களை அமைத்து உலக மக்களிடையே தோழமை உணர்ச்சியை வளர்த்தல் முதலிய துறைகளில் எழுத்தாளர்களின் பங்கை வலியுறுத்தினர். வேற்றுமொழி வல்லுநர்களும் கலந்துகொள்ளும் இம்மாநாட்டைப் பாராட்டிப் பேசியதுடன், திரு. கபீர் அவர்கள், வேற்று மொழிச் செல்வங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், தமிழ் இலக்கியச் செல்வத்தை ஒவ்வொரு இந்திய மொழியிலும் மொழிபெயர்த்து வளமுறச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினர்.

மாநாட்டில் இரண்டு கருத்தரங்குகளும், ஒரு கவியரங்கும் நடைபெற்றன. 'பிறமொழிகளில் தமிழ்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு டாக்டர் பி. வி. ராஜமன்னர் தலைமை தாங்கினர். திரு. மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் (கன்னடம்), திரு. ஆக்கூர் அனந்தாச்சாரியார் (ஹிந்தி), திரு. சி. இராதாகிருஷ்ணசர்மா தெலுங்கு), டாக்டர் எஸ். கே. நாயர் (மலையாளம்), பேராசிரியர் ஹைதர் அலி கான் (உருது), திரு. த. ந. குமாரசாமி (பெங்காளி) முதலியோர் கருத்தரங்கில் பங்கேற்றனர். மற்றொரு கருத்தரங்கு 'எழுத்தாளர்—பல கோணங்களில்' என்ற தலைப்பில் நடைபெற்றது.

பேராசியர் ஹுமாயூன் கபீர்'யுனெஸ்கோ' கருத்தரங்கைத் துவக்க வருதல். முதல் வரிசை இடமிருந்து வலம்: திரு. வி. சுந்தரராஜ் நாயுடு (தென்மொழிப் புத்தக டிரஸ்டின் பொது நிர்வாகி) திரு. எஸ். கோவிந்தராஜுலு (புத்தக டிரஸ்ட் தலைவர்), பேராசிரியர் ஹுமாயூன் கபீர் (மத்திய அமைச்சர்), திரு. டி. புருஷோத்தம் (செங்கல்பட்டு நூல் நிலையத் துறைத் தலைவர்.)

கவியரங்கிற்குத் திரு மி. ப. சோமசுந்தரம் தலைமை தாங்கினர். தமிழகத்தின் சிறந்த கவிஞர்கள் பதின்மர் கடந்த ஆண்டில் தாம் இயற்றிய சிறந்த கவிதையைப் படித்து பங்குகொண்டனர்.

'யுனெஸ்கோ' கருத்தரங்கு

புத்தகத் துறையின் பல்வேறு அங்கங்களின் முக்கிய நிகழ்ச்சி ஒன்று மே திங்களில் சென்னையில் நடைபெற்றது. 'யுனெஸ்கோ' வின் சார்பில் தென்மொழிப் புத்தக டிரஸ்ட் நடத்திய பத்து நாள் கருத்தரங்கே அச்சிறப்பு நிகழ்ச்சி ஆகும். "புத்தகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு சங்கங்களை வளர்த்து, தென்னிந்தியாவில் புத்தகத் தொழிலின் பல்வேறு துறைகளிடையே கூட்டுறவைப் பெருக்குவது" என்பதே இக் கருத்தரங்கின் தலைப்பு.

எழுத்தாளர், ஓவியர், பதிப்பகத்தார், அச்சகத்தார், நூல் விற்பனையாளர், நூல் நிலையத்தார் முதலியவர்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி கருத்தரங்கில் தம்தம் பிரச்சினைகளைக் குறித்து விவாதித்து தக்க வழிவகைகள் காண முயற்சிப்பது தென்னிந்தியாவில் இதுவே முதல் முறையாகும். மே திங்கள் 19ஆம் நாள் இக்கருத்தரங்கை மத்திய அரசாங்க விஞ்ஞான ஆராய்ச்சி,

திரு. எஸ். கோவிந்தராஜுலு (புத்தக டிரஸ்ட் தலைவர்) வரவேற்புரை நிகழ்த்துதல். இடமிருந்து வலம்: திரு. சி. கே. மாணி (கருத்தரங்கின் தொழில் இயக்குநர்), பேராசிரியர் கபீர், திரு. எஸ். கோவிந்தராஜுலு, திரு. வி. சுந்தரராஜ் நாயுடு.

கலை அலுவல்கள் அமைச்சரான பேராசிரியர் ஹுமாயூன் கபீர் துவக்கிவைத்தார்.

துவக்க விழாவில் வரவேற்புரையாற்றிய தென்மொழிப் புத்தக டிரஸ்ட் தலைவர் திரு. எஸ். கோவிந்தராஜுலு அவர்கள் அமைச்சரையும், ஏனைய விருந்தினரையும் வரவேற்ற பின்னர், அண்மைக்காலம்வரை டிரஸ்ட் சாதித்தவற்றை விளக்கிக் கூறி, மேலும் கருதியதைச் சாதிக்க மாநில, மற்றும் மத்திய அரசினர்களும் தாராளமாக உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மத்திய அமைச்சரும் பெருந்தன்மையுடன், தம் உரையின்போது, பாடப் புத்தகங்களல்லாத ஏனைய நூல் வெளியிடும் திட்டங்கள் நிறைவேற வேண்டிய பொருளுதவி கிடைக்குமாறு செய்வதாக வாக்களித்தார். அமைச்சர் தம் துவக்க உரையில், தென்மொழிப் புத்தக டிரஸ்டின் பணிகளைப் பாராட்டிப் பேசியதுடன், "ஒவ்வொரு பகுதியிலும், பண்பாட்டிலும் சிறந்தனவற்றைப் பாதுகாத்து வளர்த்தும், அதே நேரத்தில் ஒவ்வொரு பகுதியினரின் ஆக்க முயற்சிகள் ஏனைய பகுதியினர் ஏற்றுக்கொண்டு பயனடையுமாறு செய்வதாகிய இணக்கத்துக்கு வழிகோலும் தேசிய நோக்கத்தை" வளர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். "தனி நபர்கள், மற்றும் கூட்டத்தினரிடையே உள்ள வேலிகளைத் தகர்த்தெறிவதற்கு இலக்கியம் உறுதுணையானது" என்றும் அவர் குறிப்பிட்டார்.



பேராசிரியர் ஹுமாயூன் கபீர் துவக்க உரை ஆற்றுதல்.

நான்கு தென் மாநிலங்களிலும், புத்தகத் துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு சங்கங்கள் தேர்ந்தனுப்பிய நாற்பது பிரதிநிதிகளும், மாநில அரசினர், பல்கலைக்கழகங்கள் அனுப்பிவைத்த பார்வையாளர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துக்கள் பரிமாறிக்கொண்டனர். தென்னிந்திய புத்தகத் துறைக் குழுவின் (Book Industry Council of South India) தலைவரான திரு. சி. கே. மாணி கருத்தரங்கின் இயக்குநராக இருந்து சீரும் சிறப்பும் மிக்க முறையில் விவாதங்களைத் துவக்கிவைத்தும், பங்கேற்றும் சிறப்புற நடத்தித் தந்தார்.

இக்கருத்தரங்கிற்கான அடிப்படை வேலையை இவ்வாண்டுத் துவக்கத்திலேயே தென்மொழிப் புத்தக டிரஸ்ட் துவக்கியது. பதிப்பகத்தார், எழுத்தாளர், ஓவியர் ஆகியோரின் சங்கங்களைத் தம்மைக் குறித்த விவரங்களை-குறிப்பாகத் துவக்கிய ஆண்டு, குறிக்கோள்கள், சட்டதிட்டங்கள், வருவாய்க்குரிய வழிவகைகள், அமைப்பு விதிகள் முதலியவற்றைத் தெரிவிக்குமாறு டிரஸ்ட் எழுதிக் கேட்டதுடன், பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியது. பல சங்கங்கள் உடனடியாக பதிலெழுதி எல்லா விவரங்களையும் தெரிவித்தன. இவ் விவரங்களிலிருந்து சில சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கருத்தரங்கில் பங்கேற்கக்கூடிய தம் பிரதிநிதிகளின் பெயர்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டது. இந்தக் கட்டங்களில் உடனுக்குடன் பதில் வரைந்து சங்கங்கள் மிக நல்ல முறையில் ஒத்துழைத்தன. கருத்தரங்கு நடைபெற்ற 'புது வுட்லாண்ட்ஸ் ஹோட்டலில்', அயலூர்ப் பிரதிநிதிகள்



கருத்தரங்கின் பிரதிநிதிகள்—பார்வையாளரில் ஒரு பகுதியினர்.

தங்க வேண்டிய வசதிகள் செய்து தரப் பட்டன. பிரதிநிதிகள் சென்னையில் தங்கிய காலம் முழுவதும் அவர்களின் நலனுக்கும், வசதிகளுக்கும் எத்தகைய குறையும் இல் லாமல் கவனிக்கப்பட்டனர். கருத்தரங்கின் செயல் அலுவலரான திரு. டி. வி. குஞ்ஞி கிருஷ்ணன், இந்த ஏற்பாடுகளின் பெரும் பொறுப்பை ஏற்றுச் செம்மையாக நிறை வேற்றியதுடன், விருந்தினரின் உளங் கனிந்த நன்றிஅறிதலுக்கும் உரியவரா னார்.

கருத்தரங்கின் அன்றுட நடைமுறை: (1) காலையில் பங்கேற்கும் சங்கங்களின் பிரதிநிதிகள் தம் ஆய்வுரைகளைப் படித்த லும், பின்னர்ப் பிரதிநிதிகளும் பார்வை யாளர்களும் அந்த ஆய்வுரையைக் குறித் துத் தம் கருத்துக்களைத் தெரிவித்து விவா தித்தல். (2) பிற்பகல் குழுக்கூட்டங்கள்—பங்கேற்கும் ஒரே தன்மையான தொழில் துறைச் சங்கங்களின் (எழுத்தாளர் சங்கங் கள், பதிப்பாளர் சங்கங்கள் முதலியன) பல்வேறு பிரதிநிதிகள் குழுக்களாகக் கூடி காலை விவாதங்களில் தெரிவிக்கப்பட்ட கருத் துக்களை ஆராய்ந்து பிரச்சினைகளைக் கூர் ந்து நோக்கி, குழுமுதல்வரின் துணையுடன் ஆலோசனைகளைத் தயாரித்தல். இந்த ஆலோசனைகள் வரைவுக் குழு (Drafting Committee), வழித்துணைக் குழு (Steering Committee) முன்னர் கொண்டுவரப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் முடிந்த வடி வத்தில் தீர்மானங்களாக, இறுதி நாளன்று பிரதிநிதிகளின் நிறைவுக் கூட்டத்தின் முன்னர் வைக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

தென்மொழிப் புத்தக டிரஸ்டின் பொது நிர்வாகியான திரு. வி. சுந்தரராஜ் நாயுடு,

திரு. ஆர்தர் ஐசன்பர்க் அங்கத்தினரிடையே உரையாற்றுதல். அடுத்திருப்பது திரு. சி. கே. மாணி.

டிரஸ்ட் பணியாற்றும் முறையைக் குறித்து ஓர் ஆய்வுரை படித்தளித்ததுடன், விவாதங்களின்போது தோன்றிய பிரச்சினைகளைத் தீர்க்க நல்ல பல கருத்துக்களையும் தெரிவித்து உதவினர். 'ஓரியண்ட் லாங்மன்ஸ்' சென்னை நிலையத்தின் நிர்வாகியான திரு. சி. எஸ். எஸ். தாதாச்சாரி தென்னிந்திய புத்தகத் துறைக் குழுவின் பணிகளைக் குறித்தும், திரு. காரூர் நீலகண்ட பிள்ளை கோட்டயத்திலுள்ள எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் (Sahitya Pravartaka Cooperative Society Ltd) குறித்தும் முறையே ஆய்வுரைகளைப் படித்தனர். ஒழுக்கக் கோட்பாடு (Code of Ethics) குறித்து திரு. ஆர்தர் ஐசன்பர்க் படித்தளித்த ஆய்வுரை பிரதிநிதிகள், பார்வையாளர் மனத்தில் ஆழப் பதிந்ததுடன், ஒருமனதாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரு. ஐசன்பர்க் அவர்கள் கருத்தரங்கு அறிவுரையாளராகத் (Seminar Consultant) துணை இருந்து கருத்தரங்கின் ஒவ்வொரு கட்டத்திலும் பணிபுரிந்து உதவியது குறிப்பிடத்தக்கது.

மற்றும் (1) பதிப்பாளர் சங்கங்களின் சார்பில் திரு. வி. ஆர். குப்தா, (2) நூல் விற்பனையாளர் சங்கங்களின் சார்பில் திரு. எம். என். ராவ், (3) எழுத்தாளர் சங்கங்களின் சார்பில் திரு. எம். அப்துல் வகாப், (4) ஓவியர் சங்கங்களின் சார்பில் திரு. எச். வி. ராம்கோபால், (5) அச்சகத்தார் சங்கங்களின் சார்பில் திரு. ஆர். வெங்கடேசன், (6) நூல் நிலையத்தார் சங்கங்களின் சார்பில் திரு. டி. புருஷோத்தம் முதலியவர்கள் ஆய்வுரைகளைப் படித்தனர்.



தமிழ்நாட்டு நிதி-கல்வி அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், டிரஸ்ட் ஆதரவில் வெளி வரும் 327 ஆவது நூலான 'துப்பறிதல்—நவீன முறைகள்' என்ற புத்தகத்தை வெளியிடுதல். அந்நூலின் ஆசிரியரான திரு. என். கிருஷ்ணசாமி முதல் பிரதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

அன்றாட அலுவல்களான ஆய்வுரைகள் படித்தல், ஆராய்தல், குழுக் கூட்டங்கள் முதலியவற்றுடன் நின்றுவிடாமல் பிரதிநிதிகள் வரலாற்றுச் சிறப்பும், தொன்மைப் புகழும் மிக்க மாமல்லபுரச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மற்றும் 'ஹிந்து', 'ஹிக்கன்பாதம்ஸ்', 'பிரசாத் பிராசஸ் ஸ்டூடியோ', 'அமெரிக்கச் செய்தித் துறை' ஆகிய நிறுவனங்களின் அழைப்பின்பேரில் பிரதிநிதிகள் சென்று பார்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிரதிநிதிகளின் சுற்றுக் காட்சிகள், அச்சுக்கலை, படிமுறை (Processing), புத்தக விற்பனை முதலிய பல்வேறு துறைகளில் புத்தம் புதிய முறைகளை நேரில் கண்டறிய வாய்ப்பளித்தன. மேலும், ஒரு நாள் மாலை 'டீ செண்டரி'ல் தேநீர் விருந்துடன், கவி இரவீந்திரரின் வாழ்க்கையை விவரிக்கும் திரைப் படமும், அத்துடன் தென்மொழிப் புத்தக டிரஸ்டின் விளக்கப் படமான 'எழுதுகோலிலிருந்து மக்கள் வரை' (From Pen to People) என்ற திரைப் படமும் போட்டுக் காட்டப்பட்டன. பிரதிநிதிகள் அப்படங்களைக் கண்டு மகிழ்ந்ததுடன் பல உண்மைகளும் தெரிந்துகொண்டனர். அமெரிக்கச் செய்தித் துறை அலுவலகத்தில், அண்மையில் கிளென் (Glenn) என்பவர் விண்வெளியில் உலகத்தைச் சுற்றிவந்த நிகழ்ச்சியின் திரைப் படம் காட்டப்பட்டது. மற்றும், கருத்தரங்கின்போது டிரஸ்டின் அழைப்பை ஏற்று வந்து சில கலைஞர்கள், எழுத்தாளர்கள் சொற்பொழி

வாற்றினர். இவர்களில் திரு. மாஸ்தி வெங்கடேச அய்யங்கார், தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரி, மைசூர் டி. சௌடையா குறிப்பிடத்தக்கவர்கள்.

மே திங்கள் 26ஆம் நாள் கருத்தரங்கின் பிரதிநிதிகள் தென்மொழிப் புத்தக டிரஸ்ட் அலுவலகத்தில் தேநீர் விருந்து அளிக்கப் பட்டனர். விருந்துக்குப் பின்னர் சென்னை கல்வி அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் உரையாற்றினர். அமைச்சர் தம் உரையில் நல்ல நூல்களை மலிவான விலைக்கு வெளியிட ஆதரவு தந்து, கல்வியைப் பரப்ப உதவும் டிரஸ்டின் அரிய பணிகளையும் பாராட்டிப் பேசினர். அதே விழாவில் டிரஸ்டின் ஆதரவில் வெளிவந்த மிக அண்மை வெளியீடான-திரு. என். கிருஷ்ணசாமி, எம்.எஸ்சி., ஐ.பி.எஸ். (சென்னை நகர போலீஸ் துணை ஆணையாளர்) அவர்கள் எழுதிய 'துப்பறிதல்—நவீன முறைகள்' என்ற நூலை அமைச்சர் வெளியிட்டார். இந்நூல் டிரஸ்டின் ஆதரவில் வெளிவந்த 327ஆம் நூலாகும்.

கருத்தரங்கின் இறுதிக்கட்டத்தில புத்தக உலகில் குறுக்கிடும் மிகமுக்கிய சிக்கல்களை உடனடியாகத் தீர்ப்பதற்குத் தொழில் துறைச் சங்கங்கள் ஏற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகள் வெளியிடப்பட்டன. தொழில் துறைச் சங்கங்களை உருவாக்கவும் வளர்க்கவும் ஆன வழிவகைகள், அத்தகைய சங்கங்கள் செயலாற்றும் முறைகள் முதலியவற்றைக் குறித்த தீர்மானங்களின் அடிப்படையில் விவாதங்கள் நிகழ்ந்து தக்க ஆலோசனைகள் உருவாயின. புத்தகத் தொழிலில், புத்தகங்களை உருவாக்குதல், பரப்புதல் முதலிய பல்வேறு துறைகளில் உள்ள பல ஒழுக்கக்கேடான பழக்கங்களை ஒழிப்பதற்கான ஒழுக்கக் கோட்பாட்டின் அவசியத்தையும், அதை வலியுறுத்த வேண்டிய தேவையையும் குறித்த தீர்மானங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கன.

கருத்தரங்கில் பங்கேற்ற பிரதிநிதிகள் பார்வையாளர் பட்டியல் அடுத்து தரப் பட்டுள்ளது.

'யுனெஸ்கோ' கருத்தரங்கில் பங்கேற்றவர்கள்

சங்கங்களின் பிரதிநிதிகள் பட்டியல்

தமிழ்நாடு

	சங்கத்தின் பெயர்	பிரதிநிதி
1.	தென்னிந்திய பதிப்பாளர் சங்கம், சென்னை—3	திரு. ஏ. என். ஷ்வார்ட்ஜ், தலைவர்
2.	தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை—2	திரு. எம். அப்துல் வகாப், துணைத் தலைவர்
3.	அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் பெருமன்றம், சென்னை—14	திரு. அ. சீனிவாசராகவன், தலைவர்
4.	சென்னை அச்சகத்தார், கல்லச்சகத்தார் சங்கம், சென்னை—2	திரு. டி. வி. வெங்கட்ராமன்
5.	ஹிக்கின் பாதம்ஸ் (பி) லிமிடெட், சென்னை—2	திரு. வி. பலராமன்
6.	தென்னிந்திய நூல் விற்பனையாளர், பதிப்பாளர் சங்கம்	திரு. என். சங்கரநாராயணன்
7.	தென்னிந்திய புத்தகத் தொழிற் குழு, சென்னை—8	திரு. சி. எஸ். எஸ். தாதாச்சாரி

சங்கத்தின் பெயர்	பிரதிநிதி
8. ப்ரொக்ரசிவ் பெய்ன்டர்ஸ் சங்கம், சென்னை–3	திரு. எச். வி. ராம்கோபால்
9. மீனுட்சி புத்தக நிலையம், மதுரை	திரு. சி. செல்லப்பன்
10. சென்னை நூல்நிலைய ஆணைக் குழு	திரு. பி. புருஷோத்தம்
11. தென்னிந்திய ஓவியர்சங்கம், சென்னை	திரு. கே. சி. எஸ். பணிக்கர்
12. மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன், சென்னை	திரு. ஆர். வெங்கடேஸ்வரன்

கேரளா

1. சமஸ்த கேரள சாஹித்ய பரிஷத், எர்ணுகுளம்	திரு. என். வி. சங்கரநாராயண ஐயர்
2. கேரளா பதிப்பாளர் சங்கம், எர்ணுகுளம்	திரு. எஸ். வாசுதேவ பிள்ளை
3. கேரளா பிரஸ் ஓனர்ஸ் சங்கம், எர்ணுகுளம்	திரு. தாமஸ் செரியன்
4. சாஹித்ய ப்ரவர்த்தககோ-ஆபரேடிவ் சொசைடி லிமிடெட், கோட்டயம்	திரு. காரூர் நீலகண்ட பிள்ளை
5. நூல் விற்பனையாளர் குழு, கோட்டயம்	திரு. டி. சி. கிழக்கேமுறி
6. பதிப்பாளர் குழு, கோட்டயம்	திரு. கே. என். கோபாலன் நாயர்
7. அச்சகத்தார் குழு	திரு. மாணிக்கத்
8. கேரளா சித்ரகலா பரிஷத், திருச்சூர்	திரு. ஜாதவேதன் நம்பூத்ரி
9. கேரளா சாஹித்ய சமிதி, கோழிக்கோடு	திரு. எம். ஆர். சந்திரசேகரன்

மைசூர்

1. கன்னட சாஹித்ய பரிஷத், பங்களூர்–18	திரு. அன்னதானய்ய புராணிக்
2. மைசூர் மாநில முதியோர் கல்விக் குழு, மைசூர்–4	திரு. ஆர். வி. சீனிவாசமூர்த்தி
3. மைசூர் அச்சகத்தார் சங்கம், பங்களூர்–2	திரு. வி. எஸ். நாராயண ராவ்
4. ஓவியர் குழு	திரு. ரமேஷ் (பிரஜாவாணி, பங்களூர்–1)
5. எழுத்தாளர் குழு	திரு. மரியப்ப பட்

ஆந்திர பிரதேஷ்

1. நவ்ய சாஹித்ய பரிஷத், ராஜமண்ட்ரி–2	திரு. டி. வெங்கடரத்னம்
2. நவ்ய சாஹிதி சமிதி, ஹைதராபாத்–20	திரு. போதுகுச்சி சாம்பசிவ ராவ்
3, ஆந்திர பிரதேஷ்கிரந்தாலய சங்கம், ஹைதராபாத்	திரு. கோதாடி நாராயண ராவ்

சங்கத்தின் பெயர்	பிரதிநிதி
4. ஆந்திர பிரதேஷ் நூல்நிலைய சங்கம், படமட (அஞ்சல்), கிருஷ்ண மாவட்டம்	திரு. பி. நாகபூஷணம்
5. விஜயவாடா பதிப்பாளர் சங்கம், பக்கிங்ஹாம்பெட், விஜயவாடா	திரு. ஜி. லிங்கய்ய
6. ஆந்திர பிரதேஷ் அச்சகத்தார்சங்கம், நாராயண்குட, ஹைதராபாத்	திரு. கே. ஆர். கோவிந்தராஜ் (டெக்கான் கிரானிகள்)
7. குப்தா பிரதர்ஸ், விசாகப்பட்டினம்	திரு. வி. ஆர். குப்தா
8. ஓவியர் குழு	திரு. பாபு (சென்னை–4)
9. அச்சகத்தார் குழு	திரு. ஏ. நாகேஸ்வர ராவ் (ராஜமண்ட்ரி)
10. நூல் விற்பனையாளர் குழு	திரு. எம். என். ராவ் (சென்னை–1)

பார்வையாளர்கள்

1. ஆந்திரா பல்கலைக்கழகம்	பேராசிரியர் கே. ஆர். சீனிவாச அய்யங்கார் (ஆங்கிலப் பேராசிரியர்)
1. வெங்கடேச்வரா பல்கலைக்கழகம்	பி. எஸ். பட்நாயக் (துணை நூல் நிலையப் பொறுப்பாளர்)
3. கர்னாடக பல்கலைக்கழகம்	திரு. சி. எஸ். கணவி (பதிப்புத் துறை இயக்குநர்)
4. சென்னை அரசாங்கம்	திரு. எஸ்.என். சொக்கலிங்கம் (பாடப் புத்தகத் தனிஅலுவலர்)
5. தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்	திரு. அ. ச. ஞானசம்பந்தம் (செயலாளர்)
6. ஆந்திர பிரதேஷ் அரசாங்கம்	திரு. ஆர். வெங்கடராவ்
7. மைசூர் அரசாங்கம்	திரு. எஸ். வெங்கடேசய்யா (துணை இயக்குநர், மாநிலக் கல்வி ஆய்வுக் கழகம்.)
8. கேரள அரசாங்கம்	திரு. ஏ. ஜேகப்
9. சாஹித்ய அகாதமி, சென்னை–6	டாக்டர் கே. எம். ஜார்ஜ், (வட்டார செயலாளர்)

நடைபெற்ற அனைத்திலும், சொல்லப்பட்ட எல்லாவற்றிலும் ஒரு பகுதியே இலக்கியமாகியுள்ளது; எழுதப்பட்டது மிகச் சிறியதொரு பகுதியே, அதிலும் வாழ்வது மிகமிகச் சிறு பகுதியே ஆகும்.

—கேயதே.

... ...

செய்யப்பட்ட வேலையின் தன்மைக்குத் தக கூலி கொடுக்கப்படாத ஒரே தொழில் இலக்கியத்துறை யாகும்.

—ஃப்ருட்.

மொழிபெயர்ப்பு : சில பிரச்சினைகள்

திரு. கே. சேஷாத்ரி

பல மொழிகளில் பேசும் ஆற்றலைப் பெற்றிருத்தல் மனித இனத்தின் தனிப்பட்டதொரு சிறப்பாகும். ஆனால் இது கலப்பில்லாத அருட்பேறு என்று கூற இயலாது. மொழிகள் தனி நபர்களிடையேயும் நாடுகளிடையேயும் வேலிகளைப் போட்டு மக்களைப் பிரித்துவிடுகின்றன. மொழிகளினால் உண்டாக்கப்பட்ட வேலிகளைக் கடந்து பல்வேறு மொழி பேசும் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் நிலையைத் தோற்றுவிக்கும் பணியை மொழிபெயர்ப்பு ஆற்றிவருகின்றது. ஒரு மொழியில் வெளியிடப்பட்டுள்ள எண்ணத்தையும் கருத்தையும், உண்மைக்குப் புறம்பாகாமலும் பயன்படத்தக்க வகையிலும் மற்றொரு மொழியில் எடுத்து இயம்புவது மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும். உண்மையில் இது சிறந்த பணியாகும். இப்பணியை வெற்றிகரமாகச் செய்யும் ஒரு மொழிபெயர்ப்பாளர் எல்லைக் கோடுகளைக் கடந்து நல்லெண்ணத்தைப் பரப்பும் பண்பாட்டுத் தூதுவருக்குரிய எல்லாப் பெருமைகளுக்கும் உரியவராகிறார்.

வேறுபட்ட மொழிகளின் சொற்கோவைகளுக்கிடையே உள்ள சிந்தனைகளின் ஒற்றுமையால்தான் மொழி பெயர்ப்பு அமையமுடிகின்றது. எல்லா நாடுகளிலும் காலங்களிலும் வாழும் மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களானதால்தான் இந்த ஒற்றுமை அமையக் காண்கிறோம். ஆங்கிலத்தில் 'மதர்' (mother) என்ற சொல்லுக்கு இணையாக ஜெர்மானிய மொழியில் 'மத்தர்' (mutter) என்ற சொல் இருக்கக் காணலாம். பொருளளவில் ஒற்றுமையுள்ள சொற்களை இரு வேறு மொழிகளில் நிரம்பக் காணலாம் எனினும், ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் இத்தகைய இணைச்சொற்கள் வேறொரு மொழியில் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. சொல்லுக்கும் எண்ணத்திற்கும் இடையே வேற்றுமைகள் உள்ளன என்பதுடன் ஒரே சொல்லை வெவ்வேறு வகைகளில் பயன்படுவதைக் காணலாம். சில சமயங்களில், ஒரு மொழியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட பொருளில் பயன்படுத்தப்படும் சொல்லுக்கு இணையாக மற்றொரு மொழியில் சொல்லைப் பயன்படுத்த முடியாமலும் போகலாம். உதாரணமாக, டென்னிஸ் விளையாட்டில் 'லவ்' (Love) என்பதற்குப் பூஜ்ஜியம் என்று பொருளே தவிர அன்பின் ஒரு வடிவமாகாது.

சொல்லுவதற்கேற்ற சொற்களுக்கும் மேலாக எண்ணங்கள் உருவாகிக்கொண்டிருப்பதால், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கும்பொழுது எண்ணத்தின் அடிப்படையையும், பொருளையும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். மாறாக, ஏதோ கிட்டத்தட்ட சமமாக உள்ள சொற்களைக் கொண்டு நிரப்புவதால் கருதிய பயன் விளையாது. எடுத்துக்காட்டாக 'ஸ்வேதாஸ்வதர உபநிஷத்' என்பதை 'வெண் குதிரை உபநிஷத்' என்று மொழி பெயர்ப்பது எவ்வளவு பொருளற்றது என்பதைக் காணலாம். ஜீலம் நதிக்கரையில் வெள்ளம் தண்டவாளங்களின் அடிப்பலகைகளை (sleepers) அடித்துக் கொண்டுபோன நிகழ்ச்சியை ஒரு தென்

மொழிப் பத்திரிகை "ஜீலம் நதியின் கரையில் தூங்கிக்கொண்டிருந்த இரண்டு இலட்சம் நபர்களைப் பாகிஸ்தானிகள் தூக்கிக்கொண்டுபோய் விட்டனர்" என்று பிரசுரித்தது!

"நான் மொழிபெயர்ப்பதில்லை, மூலத்தை நன்கு படித்து, என் மனதில் பதிய வைத்துப் பிறகு என் சொற்களில் உருவாக்கி விடுகின்றேன்" என்று தேசிக விநாயகம் பிள்ளை ஒரு முறை குறிப்பிட்டார். மூலத்தின் சூழ்நிலையின் தன்மைக்கு ஏற்ப மொழிபெயர்ப்பு அமையவேண்டும் என்பதையே இதன் மூலம் அவர் வலியுறுத்தினார். இந்த முக்கியப் பண்பைப் பெருததாலேயே சில மொழிபெயர்ப்புக்கள் வேடிக்கையாகக் காட்சியளிக்கின்றன. சில மொழிபெயர்ப்புக்கள் மூலத்தை அப்படியே ஒட்டி அமைந்திருப்பினும், மூலத்தின் பொருளிலிருந்து மிகவும் விலகி இருப்பதால் பொருளே இல்லாதனவாக உள்ளன. நன்கு பழகிய சில பழமொழிகள் நேரடியாக மொழிபெயர்க்கப்படும்பொழுது இத்தகைய குறை பெற்று பொருளற்று காட்சி அளிக்கின்றன. ஃபிரெஞ்சு மொழியில் 'ஓநாய்களிடையே ஓநாய் போல் ஊளையிடு' என்று ஒரு பழமொழி உள்ளது. அதை அப்படியே ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதால் கிடைக்கும் புதுமொழியைவிட 'ரோமில் இருக்கும் பொழுது ரோமானியனைப்போல் நடந்து கொள்' என்ற ஆங்கிலப் பழமொழி சற்றுத் தெளிவு நிறைந்ததாக இருக்கும்.

இந்த இடத்தில் தென் மொழிப் புத்தக டிரஸ்ட் வெளியிட்ட 'தென் மொழிப் பழமொழிகள்' என்ற நூலைக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்நூலில் தமிழ் மொழியில் உள்ள பழமொழிக்கு இணையான பிறமொழிப் பழமொழிகள் தரப்பட்டுள்ளன. இதன் பெயரமைப்பில்கூட இத்தகைய பண்பைப் பார்க்கலாம். இந்த நூலின் தெலுங்குப் பதிப்புக்குத் தெலுங்கில் பரவலாக வழங்கும் 'சாடி சாமெதலு' (Sati Sametalu) என்று பெயர் அமைக்கப்பட்டுள்ளது. இது நேரடியான மொழி பெயர்ப்பல்ல—எனினும் அனைவர்க்கும் தெரிந்து பழகிய பெயராகும்.

ஒரு சொல் பயன்படுத்தப்படும் இடம் மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக, பல பொருள்களுள்ள ஒரு சொல் மொழி பெயர்க்கப்படும் பொழுது இது மிகவும் கவனிக்கப்படவேண்டியதாகும். ஓர் அகராதியை எடுத்துப் பார்க்கும் பொழுது ஒரு சொல்லுக்கு இணையான பல சொற்கள் தரப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றில் எதைப் பயன்படுத்துவது என்ற ஐயம் எழும்போது மூலச் சொல் பயன்படுத்தப்படும் இடத்தைக் கூர்ந்து நோக்க வேண்டும். உதாரணமாக 'ஸ்குயர்' (square) என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் அதற்குப்பல இணைச்சொற்கள் இருக்கக் காணலாம். சதுரம் அல்லது நேர்மை, அல்லது (லண்டனில் உள்ள) டிரஃபால்கர் ஸ்குயர் என்ற இடம், அல்லது ஜியோமிதி கருவிகளில் ஒன்றான 'செட் ஸ்குயர்'— ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கலாம். மூலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இடம் நோக்கியே அதற்கு இணையான தமிழ்ச்சொல் பயன்படுத்தப்படவேண்டும்.

அதே சமயத்தில், சொல்லுக்குச் சொல் நுட்பமாக மொழி பெயர்ப்பதும் நன்கு அமையாது, பொழிப்புரை அல்லது ஏளன உரை போன்று காட்சி அளிக்கும். சில சொற்களுக்குச் சரியான இணைச்சொற்களைக் கண்டுபிடிப்பதும் கடினம். எடுத்துக்காட்டாக சமஸ்கிருதத்தில் உள்ள 'தர்மா' 'புருஷார்த்த' போன்ற சொற்களுக்கும், தமிழில் 'கற்பு' என்ற சொல்லுக்கும் இணையான ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துதல் கடினம். மற்றும் ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் 'ஐசோடோப்'

கள், 'புரோடான்', 'நியூட்ரான்', 'வோல்ட்' 'வாட்' முதலிய சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிப்பது கடினம். இவற்றில் குறிப்பாக 'வோல்ட்' 'வாட்' முதலிய சொற்கள் அப்பெயர்களுடைய விஞ்ஞானிகள் நினைவாகப் பயன் படுத்தவதென்று உலக விஞ்ஞானிகள் மாநாடு ஒன்று முடிவு செய்தது. எனவே இவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துவ தென்பது அவ்விஞ்ஞானிகளின் நன்றியை மறப்பது போன்றதாகும். ஒரு மொழியில் உள்ள மூலச் சொற்களை ஒரே அடியாக ஒதுக்கிவிடுவதால் கருதிய பயன் விளையாது, பண்பாட்டுத் துறையில் தனித்து நிற்கவேண்டிய நிலைமையே தோன்றும். அது போன்றே, 'கான்சல்' 'புரோடோகால்' போன்ற சொற்களையும் மொழி பெயர்ப்பது கடினம்; அவற்றை அப்படியே பயன்படுத்துவது தவறாகாது. வேற்று மொழியில் வளம்பெற்று வளர்ந்துள்ள சொற்கள் சிலவற்றை நம் மொழிகளில் ஏற்றுக்கொள்வதால் மொழி வளம் பெறுமே ஒழிய குறையுறாது.

நம்முடைய கருத்துப்படி மொழிபெயர்ப்பு என்பது ஓர் இந்திய மொழியிலிருந்து மற்றோர் இந்திய மொழியில் அமையலாம்; அல்லது ஓர் இந்திய மொழியிலிருந்து அயல் மொழி ஒன்றிலோ, அல்லது அயல் நாட்டு மொழியிலிருந்து இந்திய மொழியிலோ அமையலாம். இவை ஒவ்வொன்றிலும் பல்வேறு பிரச்சனைகள் குறிக்கிடுகின்றன எனினும் ஓர் இந்திய மொழியிலிருந்து மற்றோர் இந்திய மொழியில் மொழி பெயர்க்கும்பொழுது குறிக்கிடும் தடைகளைப்பற்றி காண்போம். பல நேரங்களில் இம்மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தின் வாயிலாகச் செய்ய வேண்டியுள்ளது. எடுத்தக் காட்டாக வட இந்திய மொழிகளான குஜராத்தி, வங்காளம் முதலிய மொழிகளிலிருந்து தமிழ், தெலுங்கு முதலிய தென் மொழிகளில் மொழி பெயர்க்கும் பொழுது, தென் மொழிப் புத்தக டிரஸ்டார் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பயன் படுத்துகின்றனர். தென் மொழிகளிலும் தெலுங்கிலிருந்து மலையாளத்திலும், மலையாளத்திலிருந்து தெலுங்கிலும் மொழி பெயர்ப்பதற்கும் ஆங்கில் மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு மொழிபெயர்க்கும்பொழுது இடைநிலையாகத் தயாரிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பையும் அப்படியே வெளியிடலாம் என்ற எண்ணம் தோன்றியதுண்டு. இந்திய மொழி நூல்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புக்கள் இவ்வாறு மற்ற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப் பயன்படுவதுடன் அப்படியே ஆங்கிலமொழிபெயர்ப்பாகவும் வெளியிடப்படலாம். பின்னர், இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு ஏனைய ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கவும் பயன்படும். உண்மையில் இந்தியா வெளி உலகிற்குக் கொடுக்கக்கூடியன நிரம்ப உள்ளன. எப்படியாயினும் இந்தியா பெற்றுக்கொள்வதைவிட கொடுப்பது அளவிலும், தரத்திலும் குறைந்துவிடாது. இத்தகைய கருத்துமாற்றம் சிறந்தது என்பதுடன், உலக மக்களின் ஒருமைப்பாட்டுக்கு வழிகோலுவதாகும்.

அண்மையில் என் உடன் பணிபுரிபவர் ஒருவர் ரஷ்யக் கதை ஒன்றை மொழி பெயர்த்து, மலையாளத்தில் வெளியிட்டுள்ளார். இந்த நூலின் பெயர் 'ஒரு துள்ளி (துளி) வெளிச்சம்' என்பதாகும். அவர் ரஷ்ய மொழியை அதிகமாக அறியாராகையால், ஆங்கில மொழிபெயர்ப்புக்களின் துணையைக்கொண்டு ரஷ்ய நூலை மொழி பெயர்த்தார். ரஷ்ய மொழியை அறியாத நாம் அம்மொழிபெயர்ப்பின் தரத்தைக் குறித்துப்பேச இயலாது. ஆயினும், ஆங்கில மொழிபெயர்ப்பையும் மலையாள நூலையும் பார்க்கும்பொழுது இம்மொழிபெயர்ப்பு உண்மையில் நன்கு செய்யப்பட்டிருப்பதையும் தெளிவாக அமைந்திருப்பதையும் காண

லாம். நூலின் பெயர் மூலப்பெயரினின்று வேறுபட்டிருப்பினும், கவர்ச்சியாகவும், கருத்தை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. அயல் மொழியிலிருந்து மொழிபெயர்ப்பதில் உள்ள தொல்லைகளையும், வழிவகைகளையும் இம்மொழிபெயர்ப்பிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ், இப்சன், மாபசான், மேட்டர் லிங்க், டால்ஸ்டாய், கோர்க்கி முதலிய பல்லோருடைய நூல்கள் தென் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கன இரண்டு: விக்டர் ஹ்யூகோவின் புதினம் 'லெஸ் மிசரபில்ஸி'ன் மலையாள மொழிபெயர்ப்பான 'பாவங்கள்'–நாலப்பாட் நாராயண மேனோன் மொழிபெயர்த்தது; மாக்சிம் கோர்க்கியின் 'மதரி'ன் கன்னட மொழிபெயர்ப்பான 'தாயி'—நிரஞ்சன் மொழிபெயர்த்தது. இந்த இரண்டும், ஆங்கில மொழிபெயர்ப்பின் அடிப்படையில் உருவானவையே எனினும், மிகச் சிறப்புடன் அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை. மலையாள மொழிபெயர்ப்பான 'பாவங்கள்' சுமார் 25 ஆண்டுகட்கு முன்னர் வெளிவந்தது. மலையாள இலக்கியத்துக்கே இது ஒரு புதுவழியை வகுத்துத் தந்தது என்றால் மிகையாகாது. மூல நூலில் அமைந்த ஃபிரெஞ்சு மொழி முறைகள் மலையாளத்தின் மொழிபெயர்ப்பில் சிறப்பு கருதி பயன்படுத்தப்பட்டன. இந்தப் புது முறைகள் மலையாள இலக்கிய அமைப்பையே ஓரளவு மாற்றி அமைத்தன. இவ்வாறு புதுத்துறைகளில் புதிய முறைகளையும் அமைப்புக்களையும் அறிமுகப்படுத்தி இலக்கியத்தையும், பின்னர் மொழியையும் வளம்படுத்த சில நல்ல மொழிபெயர்ப்புக்கள் பயன்படும் என்பது இதிலிருந்து தெளிவாகும்.

மூலத்திலிருந்து நேரடியாக அல்லாது, வேறு ஒரு மொழியின் மொழிபெயர்ப்பிலிருந்து மூன்றாவது மொழியொன்றில் மொழிபெயர்ப்பது குறையுடையதாகுமோ என்ற ஐயம் சிலருக்கு எழலாம். மேற்போக்காகப் பார்ப்போர்க்கு குறையுடையதாகத்தான் இருக்கும் என்று தோன்றும். ஆனால் அது முற்றிலும் சரி என்று கூறுதற்கில்லை.

மற்றும் இந்திய மொழிகளிலும், அயல் மொழிகளிலும் சில குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புக்கள், ராமாயணம், மகாபாரதம், பைபிள், குரான் முதலியவற்றின் மொழிபெயர்ப்புக்கள் ஆகும். அவற்றில் சில மொழிபெயர்ப்பு என்ற நிலையினும் கடந்து எழில்மிக்க சிறந்த இலக்கியப் படைப்புக்களாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகத் தெலுங்கில் மகாபாரதத்தை மொழிபெயர்த்த நன்னைய, திக்கன, யெர்ரன ஆகிய மூவரின் மொழிபெயர்ப்புக்கள். அவை படைக்கப்பட்ட காலங்களின் மிகச் சிறந்த கண்ணாடிகளாக விளங்குகின்றன. அதுபோன்றே கொடுங்கல்லூர் குஞ்சுகுட்டன் தம்புரான் மலையாளத்தில் மொழிபெயர்த்த பாரதமும், பைபிளின் மலையாள மொழிபெயர்ப்பும், குரானின் கன்னட மொழிபெயர்ப்பும் மொழிபெயர்ப்பு நூல்களின் சிறப்புக்கு எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. மொழிபெயர்ப்பும் ஒரு கலையே. நல்ல மொழிபெயர்ப்பு என்பது சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாகவோ (Literal) வரையறையற்றதாகவோ (Free) இன்றி உண்மையான (True) மொழிபெயர்ப்பாக இருக்கவேண்டும்.

அடுத்து ஆங்கிலத்திலிருந்து தமிழ் அல்லது தெலுங்கில் மொழிபெயர்க்கும்பொழுது தோன்றும் ஓரிரு தொல்லைகள் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இவற்றில் முதன்மையானது பக்க அளவாகும். இத்தகைய மொழிபெயர்ப்புக்களில் பக்கங்களின் அளவு எல்லை கடந்து போகிறது என்பது எல்லார்க்கும் தெரிந்ததொன்று. இது உண்மையில் அவ்வளவு பெரிய தொல்லை அன்று எனினும், சொல்லுக்குச்

சொல் அல்லது சொற்ருெடருக்குச் சொற்ருெடர் இணையாக இந்த மொழிபெயர்ப்புக்கள் அமையவில்லை என்பது தெளிவு. சொல்லடைவின் குறைபாட்டினுல் இத்தகைய குறை விளைவதுடன், நிறுத்தக் குறிகள், வினை அமைப்பு, நேர்முகமொழி, மறைமுகமொழி முறைகள் இன்ன பிறவற்றில் மொழிகளிடையே உள்ள வேறுபாடுகளும் காரணங்களாகும். எடுத்துக்காட்டாக, ஆங்கிலச்சொற்ருெடர் ஒன்றின் பிற்பகுதி தமிழ்ச் சொற்ருெடரில் முன்பகுதியில் அமைக்கப்பட வேண்டியுள்ளது. நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தும் முறையும் நம் மொழிகளில் முன்பு இல்லாத முறையாகும்.

மொழிபெயர்ப்பில் உள்ள பிரச்சினைகள் பல்வகைப்பட்டன. மொழிபெயர்ப்பதற்குரிய மூல நூலைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து முற்றுப்பெற்ற நூலை விற்பனை செய்வது வரை ஒவ்வொரு நிலையிலும் பிரச்சினைகள் குறுக்கிடத்தான் செய்கின்றன. சில செயல் முறையில் குறுக்கிடுபவை, சில தொழில் நுட்பப்பிரச்சினைகளாகும். ஆயின், அனைத்தும் கவனமாகத் தீர்க்கப்பட வேண்டியவையே. மொழி பெயர்க்கவேண்டிய நூலையும், அதை மொழிபெயர்ப்பதற்குரிய மொழிபெயர்ப்பாளரையும் தேடிப்பிடிப்பது அவ்வளவு எளிதல்ல. சில நல்ல நூல்கள் மொழிபெயர்ப்பதற்கு மிகவும் கடினமானவை; அதே நேரத்தில் எளிதில் மொழிபெயர்ப்பதற்குரிய பலராலும் விரும்பப்படும் நூல்கள் கலையின் கீழ்த்தரமான நிலையில் நிற்கக் காணலாம். இத்தகைய கீழ்த்தரமான நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுதல் நாட்டு மக்களின் சுவையுணர்ச்சியைக் கீழ்த்தரமாக்கவே பயன்படும். இரு மொழிகளிலும் வல்லுநராக விளங்கும் ஒருவர் குறிப்பிட்ட நூலின் கருத்துப் பொருளை உணரமுடியாதவராக இருக்கலாம். இத்தகையோர் சொல்லுக்குச் சொல் விடாமல் மொழிபெயர்த்தாலும் அவர்கள் மொழிபெயர்த்த நூலிலிருந்து ஒன்றும் புரிந்துகொள்ள இயலாது. கருத்துப் பொருளை நன்ருக அறிந்தவர்களுக்கு மொழிபெயர்த்து எழுதவேண்டிய மொழியில் நன்கு பயிற்சி இல்லாத நிலை இருக்கும்.

மொழிபெயர்ப்புக்கள் நிரம்ப உள்ளன; ஆனல் மொழிபெயர்ப்புக் கலையை உணர்ந்து அதற்குத் தக்க பயிற்சியைப் பெற்றுள்ள மொழி பெயர்ப்பாளர்கள் மிகக் குறைவாக உள்ளனர். ஒரு குறிப்பிட்ட நூலை மொழிபெயர்க்கத் தக்க ஒருவரைப் பெறுவது சற்றுக்கடினமானதே. தக்க அளவு அன்பளிப்பு தருவதாக இருப்பினும், குறிப்பிட்ட நூலை மொழிபெயர்ப்பதால் தங்களின் மதிப்பு குறைந்துவிடும் என்று அவர்கள் கருதலாம். மூல ஆசிரியரைப் போலவே தானும் ஓர் உயர்ந்த பணியில் ஈடுபட்டிருப்பதாக மொழிபெயர்ப்பாளர் கருதவேண்டும். மொழிபெயர்ப்பாளர்கள் ஏதோ இரண்டாந்தர வேலையைச் செய்வதாகக் கருதி சமுதாயம் அவர்களை ஒதுக்குவதும் தவறு. தக்க உற்சாகம் இருந்தாலேயே அவர்களுடைய மொழிபெயர்ப்பும் நல்ல முறையில் அமையும்.

ஒருவகையில் மொழிபெயர்ப்பு கல்வி புகட்டுவது போன்றதே. ஒவ்வொருவரும் அது மிகவும் எளியது என்றே கருதுகின்றனர். அதில் ஈடுபட்டிருப்பவர்களைக் குறைகூறிக் கொண்டே இருப்பது வெளியார்களுடைய பொழுதுபோக்கு. ஆனல் அவர்களும் ஒரு முறை அப்பணியில் ஈடுபட்டால் அப்பொழுதுதான் அதிலடங்கியுள்ள தொல்லைகள் அவர்களுக்குப் புலனுகும். குறை நிறைந்த ஆசிரியன் பணிபுரிவது போலவே குறைபட்ட மொழிபெயர்ப்பாளனும் எளிதில் தன் வேலையை முடித்துவிடுவான். ஆனல் இருவராலும் விளையும் கெடுதல்கள் ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல.

மொழிபெயர்ப்புக்கள் இரண்டு பெரும் பான்மைப் பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்: (1) உண்மை நிகழ்ச்சி நூல்கள்—விஞ்ஞான

நூல்களின் மொழிபெயர்ப்பு, (2) படைக்கப்பட்ட இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு. இவற்றில் முன்னதைத் தியோடார் சாவொரி (Theodor savory) யின் பாகுபாட்டின்படி மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: முழுமையான மொழிபெயர்ப்பு (Perfect), போதிய அளவு (Adequate) மொழிபெயர்ப்பு. சொல்லுக்குச் சொல் இணையான சொற்களைத் தந்து மூலத்தின் பொருள் முழுவதையும் நன்கு தருவது முழுமையான மொழிபெயர்ப்பாகும். மூலத்தின் பொருளைத் தகுந்த அளவு விளக்குவது போதிய அளவு மொழிபெயர்ப்பாகும். செயல் முறைப்படி பார்த்தால் இரண்டாவது மொழிபெயர்ப்பே உண்மையான மொழிபெயர்ப்பாகும். சொல்லுக்குச் சொல் கூருதவகையில் மூலத்தின் சில பகுதிகளைச் சுருக்கியும் கூறி இருக்கலாம், அல்லது விட்டுவிட்டிருக்கலாம். செய்திக் கூற்றுக்கள் அறிக்கைகள் முதலியவை முழுமையாக மொழிபெயர்க்கப்படவேண்டும். அப்பொழுதுதான் சொல்ல முற்பட்டபொருள் முழுவதையும் வெளிப்படுத்த முடியும். விஞ்ஞான நூல்களின் மொழிபெயர்ப்பு போதிய அளவு மொழிபெயர்ப்பின் கீழ் அடங்கும். பொதுவாகக் கதை இலக்கியங்களும் இப்பிரிவின்கீழ் அடங்கும். எடுத்துக்காட்டாக டால்ஸ்டாயின் 'அன்ன கரீனின', டூமாஸின் 'பிளாக் டுலிப்', பொக்காஷியோவின் 'டிகாமாரான்' முதலியன கூறலாம். இத்தகைய மொழிபெயர்ப்பில் மூலத்திலும்,மொழிபெயர்ப்பு நூலிலும் முறையைவிட கருத்துப் பொருளே முக்கியமானது என்பது விளங்கும். பல விஞ்ஞான கோட்பாடுகள், வாய்பாடுகள் (Formulae) முதலியவை மொழிபெயர்ப்பில் நன்கு விளக்கப்படவேண்டும். இத்தகைய நூல்களில் தெளிவு தேவையெனின் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பது மட்டும் கருதிய பயன் விளைவிக்காது.

முழுமை, போதிய அளவு மொழிபெயர்ப்புக்களிலிருந்து படைப்பிலக்கியம்—குறிப்பாகக் கவிதையின் மொழிபெயர்ப்பு முற்றிலும் வேறுபட்டது. 'கவிதையை மொழிபெயர்க்க இயலுமா?' 'கவிதையை உரைநடையில் பெயர்க்கலாமா?' என்ற வினாக்கள் அடிக்கடி கேட்கப்படுகின்றன. ஒருவர் கவிஞராக இருப்பின் வேறொரு கவிதையையே இயற்றி விடலாமே! சொல்லுக்குச்சொல் மொழிபெயர்ப்பு, வரையறையற்ற மொழிபெயர்ப்பு ஆகிய இரண்டு வகைகளுக்கும் புறம்பான இடைப்பட்ட ஓர் உண்மை மொழிபெயர்ப்பு முறை உள்ளது. கவிதையை மொழிபெயர்க்க இம்முறையே ஏற்றது. உண்மை மொழிபெயர்ப்பு என்பது போதிய அளவு மொழிபெயர்ப்பிலிருந்து வேறுபட்டது. உண்மை மொழிபெயர்ப்பில் கருத்தோ, சொல்லும் முறையோ மாற்றப்படாது.

படைப்பிலக்கியத்தை மொழிபெயர்ப்பவரும் இலக்கியத்தைப் படைக்கக் கூடியவராக இருக்கவேண்டும். விஞ்ஞான நூல்களை மொழிபெயர்ப்பது போலவே இவ்வகை இலக்கியத்திலும் தனிப்பயிற்சி பெற்றிருத்தல் மிகத் தேவையாகும். உதாரணமாக, கன்னடத்தில் காளிதாசரின் 'மேகதூதத்தி'ன் பல மொழிபெயர்ப்புக்கள் இருப்பினும் கவிஞர் பேந்த்ரேயின் மொழிபெயர்ப்பே மிகச் சிறந்தது எனப் போற்றப்படுகிறது.

இதற்குத் தொடர்புடைய இரு வேறுபட்ட கட்டுரைகளை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று ஹோமரை மொழிபெயர்ப்பதைக் குறித்த மேத்தியூ ஆர்னல்டின் கட்டுரையாகும். மற்ற கருத்துக்களுக்கிடையே, கவிதையைக் கவிஞர் மொழிபெயர்ப்பதின் சிறப்பினை அவர் உணர்த்தியுள்ளார். "மூலக்கவிதை முதன்முதலில் அதன் வாசகர்களை எந்த அளவு கவர்ந்திருக்குமோ அதே அளவு மொழிபெயர்ப்

பும் தன் வாசகர்களைக் கவரவேண்டும்'' என்று அவர் குறிப்பிடுகிறார்.

இது மிகவும் தேவையானது என்று நான் கருதுகிறேன். படைக்கும் திறனுடைய கவிஞர் ஏதோ ஒரு காட்சியைக் கண்டார், அதைக் கற்பனையுடன் குழைத்துச் சந்த நயத்துடன் தருகிறார். அவர் கண்ட காட்சியே அவரை ஊக்குவித்து அதைப் பிறருக்கும் பங்கிடச் செய்தது. தான் கண்ட காட்சியின் கற்பனைப் பெயர்ப்பே கவிதை ஆகும். அவர் தாம் கருதியது முழுவதையும் கூறிவிட்டார் என்று சொல்ல இயலாது. கவிதை எல்லாமே நிறைவற்ற சொல்லோவியங்கள் தாமே? அதனால் தான் கவிதை மொழிபெயர்க்க இயலாததுபோல் தோன்றுகிறது. ஆனால் இருமொழிகளையும் நன்கு அறிந்த கவிஞரின் மொழிபெயர்ப்பிலும்மூலத்திற்கும் வேறுபாடு இருப்பதாகவே தெரியாது. உண்மையில், மொழிபெயர்ப்பாளர் முதல் கவிஞரின் உணர்ச்சிப் பெருக்கைப் பெறவேண்டும். மூலக் கவிதையைத் தூண்டிய உணர்ச்சி, எவ்வளவு சிறிய அளவு உடையது என்றாலும் அதை மொழிபெயர்ப்பாளரும் பெற்றாகவேண்டும். இயலாத ஏதோ ஒன்றை நான் கூறுவதாக எண்ணிவிடக்கூடாது. கவிதையை மொழிபெயர்ப்பவர் உணர்ச்சிப்பெருகிய நிலையிலேயே அப்பணியில் ஈடுபடவேண்டும். மூலக்கவிஞர் இயற்கை அல்லது வாழ்க்கையிலிருந்து உணர்ச்சித் தூண்டுதலைப் பெற்றதைப்போல மொழிபெயர்ப்பாளர் மூலக் கவிதையிலிருந்து பெற இயலும்.

இரண்டாவது கட்டுரை, மொழிபெயர்ப்பைக் குறித்து ஜோஹ்ன் சியார்டி (Johu Ciardi) எழுதியதாகும். மொழிபெயர்ப்பு ஒரு தோல்விக் கலையே என்பதை விளக்குகிறது இக்கட்டுரை. 'சாடர்டே ரெவ்யு' (Saturday Review) என்ற பத்திரிகையின் கவிதைப் பதிப்பாசிரியராக அவர் பணியாற்றி வருகின்றார். டாண்டேயின் 'டிவைன் காமடி' (Dante's Divine Comedy) என்ற காவியத்தை அவர் 15 ஆண்டுகளாக மொழிபெயர்த்து வருகிறார். ''ஒரு மொழிபெயர்ப்பாளர் தம் முறையை விளக்க முயற்சிப்பது உண்மையில் தோல்வியை மழுப்புவதே ஆகும்'' என்று அவர் கூறியுள்ளார். ''மொழி பெயர்ப்பில் மறைந்து விடுவதே கவிதை'' என்ற ஃபிராஸ்டின் (Frost) கூற்றை அவர் மேற்கோளாகக் காட்டுகிறார். அவர் கருத்துப்படி மொழிபெயர்ப்பு என்பது மிகவும் அலுப்பைத் தரும் கலையாகும். எத்தகைய ஒரு வரைநிலையுமின்றி உணர்நிலையைக் கொண்டே தேர்ந்தெடுத்து இணையான சொற்களைச் சோதித்து சோதித்துப் பொருத்தவேண்டும். மொழிபெயர்ப்பாளரும் உணர்நிலையைக் கொண்டே சரியான சொற்களை அமைக்கவேண்டியுள்ளது; எனவே அவருடைய மொழிபெயர்ப்பின் தகுதியையும் அளவுகோல்கொண்டு அளந்து பார்க்க இயலாது. ஆனால் இதற்காகக் கவிதையை மொழிபெயர்க்கவே இயலாது என்று எண்ணி வேதனைப்படவோ, கவிதை மொழிபெயர்ப்புக்கள் யாவும் குப்பை என்று ஒதுக்கவோ தேவையில்லை.

நான் நன்னம்பிக்கைவாதி. நம் நாட்டிலும் சரி, உலகிலும் சரி, மொழிபெயர்ப்பு–குறிப்பாகப் படைப்பிலக்கியத்தின் மொழிபெயர்ப்பு, மக்களின் சிந்தனையை உருவாக்கவும், உணர்ச்சிகளைத் தூய்மைப்படுத்தவும், மனித சமுதாயத்தின் ஒருமைப்பாட்டை உணரச்செய்யும் துறையிலும் எதிர்காலத்தில் நன்கு பயன்படும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

—

தெலுங்கு இலக்கியத்தின் அண்மை வளர்ச்சி

பி. பத்மராஜு

மிகவும் அண்மையில் வளர்ந்த தெலுங்கு இலக்கியத்தைக் குறித்து மட்டும் இங்குக் குறிப்பிட நான் விரும்பவில்லை ஏனெனில் அண்மையில் வெளிவந்த தெலுங்கு நூல்களையும், தெலுங்கு பத்திரிகைகளையும் விரிவாகப் படிக்கும் வாய்ப்பு எனக்கு இல்லை. மிகவும் சிரமம் எடுத்தால்தான் அந்த வேலையை ஒழுங்கு தவருமல் செயலாற்ற முடியும். எனக்குத் தட்டுப்பட்ட சில நூல்களையும், பத்திரிகைகளை மட்டும்தான் நான் படித்துவந்தேன். நான் முயற்சி எடுத்து தேடிப் பிடித்து படிக்கவில்லை. இரண்டாவதாக, அத்தகைய ஆழ்ந்த ஆராய்ச்சி மற்ற மொழிக்காரருக்குச் சுவையுள்ளதாக இருக்காது. எனவே, 'அண்மை' என்ற பொருளில் கடந்த பத்தாண்டுகளை உள்ளடக்கலாம் என்று எண்ணுகிறேன். அப்பொழுதுதான் நான் சற்றுக் குறிப்பிடத்தக்கது என்பதைத் தேர்ந்தெடுக்க இயலும்.

ஆந்திராவில் ஒவ்வொரு மூன்ருவது மனிதனும் ஒரு கவிஞனின் உள்ளப் பாங்கினைப் பெற்றிருக்கிருன் என்று சொல்லப் படுகிறது. அவர்களுடைய உணர்ச்சிப் பெருக்கு இயற்கையானதும் தற்காலிகமானதும் ஆகும். ஓர் ஆந்திரன் கவிஞனுக இல்லை என்ருல் கவிதைப்பிரியனுகவாவது இருப்பான். ஆந்திராவின் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெரும்பாலான அறிவாளிகள் தம் உண்மை உலகைவிட கற்பனை உலகிலேயே அதிகமாகச் சஞ்சரிப்பவர்கள்; அவர்களுடைய எழுத்திலும் உள்ளத்து உணர்ச்சிகளுக்கே அதிகம் இடம் இருப்பதைக் காணலாம். அவர்களுடைய சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள் முதலியவற்றின் உரைநடையும், உவமை கவிஞனின் எண்ணங்கள் நிறைந்து அழகுடன் மிளிரக் காணலாம். சிறு கதைகள் சாதாரணமாக இவ்வாறு துவங்கும்:

"மேலைக் குன்றின் மறைவில் சூரியன் எனும் பந்து சிறுகச் சிறுக சரிந்தது. செக்கர் வானத்தின் சிவப்பொளி தன் அளவில் குன்றி ஒளி மங்கத் தொடங்கிய அந்நேரத்தில் இடையர்கள் தங்கள் மாடுகளை வீடு நோக்கி ஓட்டிக்கொண்டிருந்தார்கள்..."

அண்மையில் வெளிவந்த கவிதையின் அளவோ ஏராளம். அவற்றில் பெரும் பகுதி நன்கு பழகிய சந்த அமைப்பிலேயே இருக்கும். இப்பொழுதும் கவிதைகளில் பழைய கிரந்த தெலுங்கு பயன்படுத்தப்படுவதே அதற்குக் காரணம். பேச்சுத் தெலுங்கிலிருந்து நல்ல கவிதைகளை இயற்றவதில் ஸ்ரீ ஸ்ரீ, ஆருத்ரா போன்றவர்கள் மிகச் சிலரே உள்ளனர். மற்ற கவிஞர்கள் அனைவரும், பழைய பாவினங்களைப் பயன்படுத்தினுலும் சரி, புதிதாகப் பரவி வரும் 'கேயா' (Geya) பாவினத்தைப் பயன் படுத்தினுலும் கிரந்த தெலுங்கிலேயே எழுதுகின்றனர். 'கேயா' பாவினம் மரபுவழிப் பாவினங்களை நோக்க புதுமையானதே. இருப்பினும், அவற்றின் மொழி நடையும், வர்ணனைகளும் நன்கு பழகிய தன்மையுடன் காட்சி அளிக்கும். அவற்றைக் கேட்கும்பொழுது ஏதோ பழைய இசைப் பாடலொன்றைப்புதிய இசைக் கருவியிலிருந்து கேட்பதுபோல இருக்கும். தனிப்பட்ட சிறப்புடைய காட்சிகளும் நன்கு பழகியவை போன்றே உள்ளன.

சோர்வூட்டும் 'வைகறை'

ஹைதராபாதிலுள்ள 'நவ்ய சாஹிதி சமிதி' வெளியிட்டுள்ள கவிதைத் தொகுப்பு ஒன்று நான் மேற் கூறிய கருத்தை மெய்ப்பிப்பதைக் காணலாம். அந்த நூல் முழுவதும் நன்கு புனையப்பட்ட ஆனுல் குறிப்பி

டத்தக்க தகுதியற்றவையான் கவிதைகள் நிறைந்துள்ளன. ஒரே மாதிரியான சொற்களுடன் ஒரே மாதிரியான கருத்துக்களும் திரும்பத் திரும்ப பயன்படுத்தப் படுவதைக் காணலாம். முதற்கண் உள்ள திரு. சிவ சங்கரசாமி அவர்களின் கவிதையில் மட்டுமே நம்பிக்கையும் ஆவலும் எதிரொலிக்கின்றன; பிற யாவற்றிலும் சோர்வே நிறைந்திருக்கிறது. அவையாவும் உடைந்த இதயங்கள், சிதைந்த நம்பிக்கைகள் முதலியவற்றையே வர்ணிக்கின்றன, 'வைகறை' கூட புத்துயிர் அளிக்கும் தூதுவனல்ல; கொடுங்கனவொன்றின் முடிவில்லாத முடிவே அது. சில கவிதைகளின் தலைப்புக்களே அவற்றைப்பற்றி நன்கு விளக்கும்: 'உடைந்த இதயங்கள்', 'பசியும் தாகமும்', 'அச்சுறுத்தும் வெறுமை', 'அஞ்சியமனிதன்' 'உதவாக் கரையின் போர் எச்சரிக்கை'. அண்மைக் காலத்தில் வெளியிடப்படும் கவிதைகளுக்கு இந்தத் தொகுப்பே நல்லதொரு எடுத்துக்காட்டு. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெரும்பாலான படித்த இளைஞர்களின் ஊக்கமற்ற, சோர்ந்த அலுத்துப்போன நிலையை அவை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

தெலங்கானாவில் புகழடைந்து வரும் சி. நாராயண ரெட்டி, தாசரதி ஆகிய இரு புதிய கவிஞர்கள் உணர்ச்சிப் பாடல்களுக்குப் புத்துயிர் அளித்துள்ளனர். இவர்களில் தாசரதி சற்று அதிகமான கருத்தாழத்தையும், நாராயண ரெட்டி சிறிது அதிகமான கற்பனையையும் பெற்றுள்ளனர். தாசரதி பெரும்பாலும் மரபுவழிப் பாவினங்களையே பயன்படுத்துகிறார். அவர் தம் கவிதைகளில் அதிகமான சக்தியையும், உணர்ச்சியையும் கலந்து, அப்பாவினங்களால் தோன்றக் கூடிய குறைகளைக் கடந்துவிடுகிறார். புத்தரைக் குறித்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு அவர் இயற்றிய 'மகா போதி' என்ற கவிதை சிறப்புடையதாகும். தெலுங்குக்கு அவருடைய மிகச் சிறந்த காணிக்கை, உருது மொழியிலிருந்து அவர் மொழிபெயர்த்த 'காலிப் கவிதைகள்' (Songs of Galib) ஆகும். ஃபிட்ஜெரால்ட் மொழி பெயர்த்த ஓமார் கயாமின் ருபயட்களுக்கு ஒப்பாக இவற்றைக் கூற முடியும். உருது வர்ணனைகள் தெலுங்கின் வாயிலாக வந்து அழகுடன் மிளிர்கின்றன. இந்த மொழிபெயர்ப்பின் சிறப்பினை உணர்த்த வந்த தெலுங்குக் கவிஞர் ஆருத்ரா, "இத்தகைய சிறந்த மொழிபெயர்ப்பாளர் கிடைக்கப் பெற்றது காலிபின் அதிர்ஷ்டம்" என்றார்.

நாராயண ரெட்டி பெரும்பாலும் 'கேயா'ப் பாவினங்களைப் பயன்படுத்துகிறார். அவர் அதிகமாகவும் எழுதுகிறவர். கடந்த பத்தாண்டுகளில் அவருடைய கவிதைத் தொகுப்புக்கள் பத்துக்கும் மேலாக வெளிவந்துள்ளன. அவர் நுட்பமான கேள்வியறிவையும், சிறந்த இசை ஞானத்தையும் பெற்றுள்ளார். இருப்பினும் 'நாகார்சுன சாகரம்' போன்ற நீண்ட கவிதைகளில் அவருடைய நடை அலுப்பைத் தருகின்றது. ஒன்பது சீர்களுடைய அக்கவிதையின் வரிகளை ஒன்றன்பின் ஒன்றாகப் படிக்கும்பொழுது ஒரே தன்மையான ஓசையே காதில் விழுவதால் என்ன சொல்லப்படுகிறது என்பது புரியாமலே போய்விடுகிறது. மூன்று, நான்கு ஆண்டுகட்கு முன்னர் அகில இந்திய ரேடியோவின் ஹைதராபாத் வானொலி நிலையத்தில் அவருடைய 'ராமப்பா' என்ற நாடகம் ஒலிபரப்பப்பட்டது. ஒரு சிற்பிக்கும், ஒன்றும் அறியாத பேதைப் பெண்ணொருத்திக்கும் இடையே தோன்றிய காதலைக் குறித்த அந்த நாடகம் உண்மையில் ஒரு சிறந்த கதை ஆகும். அந்த நாடகத்தில் அவருடைய கற்பனை புதுமையுடனும், தனித் தன்மையுடனும் சிறக்கக் காணலாம்.

இந்த ஆண்டுகளில் ஆருத்ரா அவ்வப்பொழுது ஒரு கவிதையை எழுதியுள்ளார். அவற்றில் மிகச் சிறந்தது 'நாய் கொன்ற குழந்தை' என்ற கவிதையே. ஆந்திராவில்

ஒரு மாவட்ட மருத்துவ சாலையில் மகப் பேறு பிரிவிலிருந்து ஒரு குழந்தையை ஒரு நாய் தூக்கிக்கொண்டுபோய் அதன் ஒரு பாகத்தைக் கடித்துத் தின்றுவிட்டது. இந்தக் கவிதை அந்த நிகழ்ச்சியைப் பற்றி விளக்கவில்லை – இறந்த குழந்தைக்காகக் கண்ணீர் சிந்தவுமில்லை. அந்த நாய் மற்றும் அக் குழந்தை – இவர்களில் வாழ்க்கையின் பல சிக்கல்கள் உருவகப்படுத்தப் படுகின்றன. சூழ்நிலைக்கேற்ற வகையில் சொல்லோவியங்கள் பயன்படுத்தப்பட்டு அந்த அவலத்தின் பயங்கரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸ்ரீ யும் ஆருத்ராவும் தெலுங்கு கவிதைத் துறையில் ஒரு புதுப் பாதையைத் துவக்கியுள்ளனர்; ஆனால் அவர்களைப் பின்பற்றுவோர் மிகக் குறைவானவரே உள்ளனர். அவர்களுக்குள்ள ஒரு முக்கியப் பிரச்சினை பேசும் மொழியிலுள்ள சொற்களை அடுத்தடுத்து இருக்கும்படி பொருத்திக் கவிதையை உருவாக்குவதே ஆகும். மரபுவழிக் கவிதை முறையில் எதை அமைத்தாலும் அது கவிதையாகக் காட்சி அளிக்கும். ஆனால் பேசும் மொழியைப் பயன்படுத்தி நல்ல கவிதையை உருவாக்குவது ஒருசில சிறந்த கவிஞர்களால் மட்டுமே இயலும்.

நளினிகுமார் என்பவர் கவிஞர் என்று சொல்வதைவிட கவிஞரை ஆதரிக்கும் தோழன் என்று கூறுவதே பொருந்தும். அவர் கவிதை புனைவதில் தீவிரமாக ஈடுபடவில்லை. இருப்பினும் கவிஞனின் அரிய திறமை அவரிடம் இருக்கக் காணலாம். ‘பணி விபணி’ (பணமும் பண அங்காடியும்) என்ற ஒரு தனித்தன்மை வாய்ந்த கவிதையை அவர் எழுதியுள்ளார். எண்சீர்களுடைய நான்கு சிறுசிறு வரிகளைக் கொண்ட பாடல்களில் தம் பரந்த அனுபவத்தை யெல்லாம் பிழிந்தெடுத்து அக்கவிதையில் தந்துள்ளார். அறிவாற்றல், நுண்மதி, உண்மைக் கவிதைத் தன்மை இக்கவிதையில் நிறைந்திருக்கின்றன. சில வரிகள் மிகவும் குறிப்பிடத்தக்கன :

“நேற்றைக்கும் நாளைக்கும் இடையே
கைபுனைந்து இயற்றுப் பாலமே
இன்றைய பொழுது.”

“ஒரு வேளை இந்த வாழ்க்கை
செலவுக்கும் காணாத பேரமோ?”

இசை நாடகங்கள்

கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, மிகச் சிறந்தன என்று போற்றப்பட்ட இரு இசை நாடகங்களை இங்குக் குறிப்பிடவேண்டும். அவற்றில் ஒன்று எஸ். வி. ஜோகாராவ் இயற்றிய உணர்ச்சிப் பாடலாகும். அப் பாடல் அரண்மனைச் சூழ்நிலையில் ஒரு கலைஞனின் காதலைப் பற்றியதாகும். அது ஓர் இசை நாடகமாக ஆந்திரா பல்கலைக் கழகத்தில் நடிக்கப்பட்டு பாராட்டைப் பெற்றது. இதன் ஆசிரியரான ஜோகாராவ் அண்மைக் காலத்தில் புகழ்பெற்ற அறிவாளியும், கவிஞருமாவார். மற்றொரு இசை நாடகம் புகழ்பெற்ற கவிஞர் கிருஷ்ண சாஸ்திரி இயற்றிய ‘கிராமத்தில் ஓராண்டு’. அது அகில இந்திய ரேடியோவின் ஹைதராபாத் நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டது. ‘ஊர்வசி ‘ப்ரவாசம்’ முதலியவற்றை இயற்றிவந்த காலத்திலிருந்து கிருஷ்ண சாஸ்திரி மிகவும் முன்னேறி வந்துள்ளார். அவருடைய அண்மைக்காலக் கவிதைகளில் அவர் சாதாரண குடி மகனின் சொல் தொகுதியையும், கற்பனையையும் பயன்படுத்தி அதே நேரத்தில் அவருக்கே உரித்தான இசை அமைப்பையும் கையாண்டுள்ளார். ‘கிராமத்தில் ஓராண்டு’ என்ற இசை நாடகத்தில் தெலுங்கிலேயே மிகச் சிறந்த பாடல்கள் சில காணப்படுகின்றன. அவருடைய கற்பனைத் திறன், உலக வாழ்க்கையைப் பற்றிய அறிவாற்றல், மக்களன்பு, மற்றும் கிராமீய சூழ்நிலையைப் பற்றிய பரந்த அறிவு ஆகிய அனைத்தும் அந்த இசை

நாடகத்தில் சிறப்புடன் விளங்கக் காண லாம்.

கதைகள்

முதற்கண் நான் குறிப்பிட்டதுபோல் ஆந்திராவின் சிறுகதை எழுத்தாளர்களும் கவிஞரின் உளப்பாங்கை ஓரளவு பெற்றே உள்ளனர். அக்கதைகளிலெல்லாம் ஆசிரி யர்களின் உள்ளத்து உணர்ச்சிகள் கொந் தளித்து எழுவதைக் காணலாம். பெரும் பாலான கதைகள் தன்மைக் கூற்ருகவே அமைந்திருக்கும். 'நான்' என்று அக்கதை களில் காணப்படுபவர் ஏதோ ஒரு பாத் திரம் என்ற எண்ண வேண்டாம். பெரும் பாலும் அவர் கதை ஆசிரியராகவே இருப் பார். மற்றும் கதை நிகழ்ச்சிகளை அவர் எடுத்துச் சொல்லும் முறையிலும் செய்தி களைத் தெரிவிக்கவேண்டும் என்பதை விட அலசி ஆராயவேண்டும் என்ற உணர்ச்சி மேலிட்டிருப்பதைக் காணலாம். அக் கதை களில் "நான்" மற்ற பாத்திரங்களுடன் பேசும் பொழுதும் இயற்கையான உரை யாடலுக்கு மாருக "நான்" மற்ற பாத்திரங் களைவிட உயர்ந்தவன் என்பதை நிலை நிறுத்தும் நோக்கத்துடன் மறைமுகமாக உரையாடல் பயன்படுத்தப் பட்டிருப்பதும் நோக்கத் தக்கது. ஒரு 'சர்கஸ்' குழுவைப் பின்னணியாகக் கொண்டுள்ள 'செயற்கை விளக்குகள்' என்ற ஒரு கதையில் "நான்" ஒரு பாத்திரத்திடம் கூறுகிருன்:

"நல்லது. இனி நான் என் வழியே போகி றேன். நான் ஏன் குட்டனிடம் குறை கூற வேண்டும்? நீ உன் மனத்தைப் பெரிதும் வருத்திக்கொள்கிருய் என்பது எனக்குத் தெரியும். ஆனல், எவ்வளவு காலம் ஒரு வன் மற்ருெருவனைக் கண்டு பயந்து கொண்டே வாழ முடியும்?..."

தெலுங்கில் கதை சொல்லும் முறையைப் பற்றி ஒரு பொதுவான கருத்தைத் தெரி விக்க முடியும். உலகப் போர் முடிந்த பிறகு இந்தக் கதை கூறும் முறை உருத் தெரி யாத வகையில் மாறிவிட்டது. அதற்கு முன் னர் எப்பொழுதும் பெற்றிராத அத்தகைய எளிமையைத் தெலுங்கு உரைநடை இப்பொழுது பெற்றுள்ளது. முன்னர் இருந்ததுபோல் தடைப்பட்ட தன்மை யுடனே, மிக்க முயற்சியுடன் கூடியதாகவோ, தீவிரமான சிந்தனையின் விளைவாகவோ இப்பொழுதைய தெலுங்கு உரைநடை இருப்பதில்லை புதிய சொல்லமைப்புக்க ளும், மொழி மரபுகளும் பேச்சு மொழியை மிகவும் வளப்படுத்தியுள்ளன. எனவே மிக வும் சிக்கலான கருத்தையும் எளிமையான முறையில் சொல்ல இயலுகிறது. இன் றைய கதை ஆசிரியர்கள் அனைவரும் தாம் எழுதும் மொழியை எளிதாகக் கையாளும் திறமையைப் பெற்றுள்ளனர். அவர்களின் முன்னேடிகள் செய்ததுபோல் அவர்கள் ஆங்கிலத்தில் சிந்தித்து தெலுங்கில் எழுத வேண்டிய தேவை இப்பொழுது இல்லை.

இன்றைய தலை முறையில் மிகவும் புகழ் பெற்றவர்களும், திறமை வாய்ந்தவர்களு மாகிய எ. ராமகிருஷ்ண ராவ், வி. பாண்டு ரங்க ராவ், ராஜாராம், ஆர். விஸ்வநாத சாஸ்திரி ஆகியோர் ஒவ்வொருவரும் தனிப் பட்ட கதை நவில்முறைகளைப் பெற்றுள் ளனர். அவர்களுடைய கதைகளில் அவர் களின் தனிப்பட்ட மனிதப் பண்புகள் பிரதி பலிக்க காணலாம். இருந்தாலும் அவர்க ளுடைய கதைகளில் ஒரு பொதுத் தன்மை யைக் காணலாம்—அவர்கள் வாழும் காலத் தின் விளைவு அது. அவர்களுடைய பரிவு உணர்ச்சிகள் பெரும்பாலும் பொதுவான வையே. அவர்கள் எடுத்துக்கொண்ட பிரச் சனைகளும் ஒரே தன்மையானவையே. வயது முதிர்ந்தவர்களையும், அவர்கள் பிரதி பலிக்கும் வாழ்வின் மதிப்பீடுகளையும் எடை போடுவதில், இந்த எழுத்தாளர்கள் தங்கள் முன்னேடிகளை விட மிகவும் கவலையற்றவர் களாக இருக்கின்றனர். இன்றைய எழுத் தாளர்களின் எழுத்துக்களில் தம் வீடு, தம் ஊர் முதலியவற்றைக் குறித்த தாயக நாட்

டம் இடம் பெறுவதைக் காணலாம்;அவற்றி லும் கிராமப் புறங்களில் புகுந்து வரும் மாபெரும் மாற்றங்கள் முக்கியமான இடம் பெறுவதைப் பார்க்கலாம்.

இந்த இளம் எழுத்தாளர்களில் ஆர். விஸ்வநாத சாஸ்திரியிடம் எனக்கு மிக்க மதிப்பு உண்டு. தெலுங்கு உரை நடை இது வரை பெற்றிராத ஒன்றை அவர்கொடுத் துதவினர். அவருடைய கதை அமைப் புக்கு ஒப்பான தன்மையை ஜேம்ஸ் ஜாய்ஸ், ஈடித் சிட்வெல் முதலியவர்களின் எழுத் துக்களில் காணலாம். ஆனால், இவருடைய கதைகள் அவற்றின் மொழிபெயர்ப்புக்கள் என்று சொல்வது பொருந்தாது. நாட்டின் இயற்கையான சொல்லமைப்பு அவர் எழுத்தில் இடம் பெற்றுள்ளது. உளஇயல் குறியீடுகளைத் தம் எழுத்துக்களில் நிரப் பும் தவற்றை அவர் செய்யவில்லை. முற்றி லும் புதுமையான குறியீடுகளை அவர் பயன் படுத்தியுள்ளார். இருப்பினும் அவை அவர் சொல்ல எடுத்துக்கொண்ட பொருளோடு தொடர்பற்றவை அல்ல.அவற்றின் புதுமை நம்மைக் கவர்ந்து விடுகின்றன. அவர் விளக்க முற்படும் பயங்கரமான உண்மை நிலையை மறைக்கும்படியாகச் செழித்த நகைச் சுவை ஒட்டத்தைப் பெற்றிருப்பது அவருடைய எழுத்தின் மற்றொரு முக்கிய பண்பாகும். சார்லி சாப்ளினுடைய கடு கடுப்பு கலந்த நகைச்சுவை அவருடைய எழுத்தில் நிறைந்திருக்கக் காணலாம். அவ ருடைய கதைகளை உரக்கவும் வேகமாகவும் படிக்கவேண்டுமென்ற அவா எனக்குத் தோன்றும். 'ஆந்திர பத்ரிகா'வின் மாதப் பத்திரிகையான 'பாரதி' யின் அண்மை வெளியீடு ஒன்றில் வெளிவந்த 'நல்லதும் கெட்டதும்' என்ற கதை அவருடைய மிகச் சிறந்த கதைகளில் ஒன்று.

தெலங்கானு பகுதியும் பல நல்ல சிறு கதை எழுத்தாளர்களை உண்டாக்கியுள் ளது. ஹைதராபாதைச் சேர்ந்த சுர மௌலி என்பவர் பல நல்ல சிறு கதைகளை எழுதியுள்ளார். தெலங்கானு பேச்சு மொழி யை மிகவும் திறமையுடன் அவர் தம் கதை களில் கையாண்டுள்ளார். வாழும் மொழி யின் புதுமை அவருடைய நடைக்கு ஓரழ கைக் கொடுத்துள்ளது.

நல்ல தரமுள்ள கதைத் தொகுப்புக்கள் ஹைதராபாதி லிருந்து வெளியிடப் படு கின்றன. முக்கியமாக, 'பரிசராலு' (சூழ் நிலை) என்ற தலைப்பில் வெளிவந்த தொகுப்பும், நவ்யசாஹிதி சமிதியின் வாயி லாக வெளியிடப்பட்ட மற்றொரு தொகுப் பும் மிகவும் குறிப்பிடத்தக்கன.

நாடகங்கள்

தெலுங்கில் நாடக இலக்கியம் அதிகமாக வளரவில்லை, இம்மொழியில் தலை சிறந்த நாடக நூலான 'கன்யா சுல்கம்' (மணப்பெண் காணிக்கை) 1897 ல் புகழ்பெற்ற குருஜாடா அப்பாராவ் அவர்களால் எழுதப் பெற்ற தாகும். அந்த நாடகத்திற்கு இணையான தொன்று இதுவரை எழுதப்படவில்லை என் ருல் மிகையாகாது. தெலுங்கு எழுத்தாளர் கள் பெரும்பாலும் அகப் பண்புகளைப்பற் றியே குறிப்பாக இருப்பது இதற்கு அடிப் படையான காரணமாகும். நாடக ஆசிரியர் தம் கதைப் பாத்திரங்களின் பண்புகள்,கதை நிகழ்ச்சிகள் முதலியவற்றின் புறத் தன்மை யில் கூர்ந்த நோக்குடையவராக இருக்க வேண்டும். தம்முடைய உள்ளத்து உணர்ச்சி களைப் பல பாத்திரங்களின் வாயிலாக வெளியிட வேண்டும். ஆனால், தெலுங்கு எழுத்தாளர்களோ, தம் உணர்ச்சிகளெல் லாவற்றையும் ஒரே பாத்திரத்தின் வாயி லாக வெளியிடுகின்றனர். அநேகமாக அந்தப் பாத்திரம் ஆசிரியரின் பிரதிபலிப் பாக இருக்கும். அவர்கள் தம் கதாநாயகர் களை மனிதத் தன்மையுள்ளவர்களாகப் படைக்க இயலாமல் போய்விடுகின்றது. சில வகைக் கருத்துக்கள் அல்லது நோக் கங்களின் அடையாளங்களாக அக் கதா

நாயகர்கள் அமைந்து விடுகின்றனர். இதனால்தான் தெலுங்கு எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர், தம் நாடகங்களில் பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றின் புறத்தன்மையை நன்கு விளக்க இயலுவதில்லை. இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும், மிகச் சிறந்த நாடகத்திற்குரிய பரிசை ஏதாவது ஒரு நாடகத்திற்கு நாடக கலா பரிஷத் கொடுத்து வருகின்றது.

சிறு நாடகங்களின் நிலை இதிலிருந்து சிறிது வேறுபட்டதாகும். சில நல்ல சிறு நாடகங்கள் எழுதப்பட்டு வெற்றிகரமான முறையில் நடிக்கப்பட்டன. ராவிகொண்டல ராவின் 'கதா கஞ்சிகி' (கதை காஞ்சிக்கு) கலை என்னும் கோணத்திலிருந்து பார்ப்பினும், தயாரிப்பு என்னும் அளவு கோலைக் கொண்டு அளந்து பார்ப்பினும் மிகச் சிறந்த நிலையை அடைந்துள்ளது.

இங்கு, மிகச்சிறந்த ஆற்றலையும், ஆழ்ந்த அனுபவத்தையும் உடைய நாடக ஆசிரியரான பமிடிபாடி ராதாகிருஷ்ண (Bhamidipati Radhakrishna) என்பவரைக் குறிக்காமல் இருக்க முடியாது. ஆற்றல் மிக்க ஒரு தந்தையின் தகுதிமிக்க புதல்வர் அவர். அவருடைய தந்தையான காலஞ்சென்ற காமேஸ்வர ராவ் நகைச் சுவை இலக்கியத்தில் முன்னோடியாவார். அவர் பல கட்டுரைகள், கதைகள் மற்றும் நகைச்சுவைக் கூத்துக்களையும் எழுதினர். தந்தையின் நகைச்சுவை முயற்சித்து, சிந்தித்து, புலமையின் விளைவாக வெளிவருவதாகும்; மகனின் நகைச்சுவையோ இயற்கைத் தன்மையுடன், வளம் நிறைந்து வாழ்க்கையுடன் பிணைந்து வருவதாகும். அவருடைய நாடகம் ஒன்றில் ஒரு கணவன் அழுதுகாண்டிருக்கும் தன் மனைவியை நோக்கிச் சொல்கிருன்: "போதும், குழாயை மூடிவிடு!" இந்த ஒரு வரி, நாடகம் பார்ப்பவர்களை ஐந்து நிமிஷங்கள் வரை குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும். மேலும் பார்ப்பவர்களின் கவனத்தைக் கவரும்படியாக, நல்லதொரு கட்டத்தில் திறமையுடன் அந்த வரி பொருத்தப்பட்டுள்ளது. மற்றும் அந்த ஒரு கூற்று அந்தக் கணவன் மனைவியருக்கிடையே உள்ள தொடர்பினை மிகவும் தெளிவாக விளக்கிவிடுகின்றது. அவருடைய மிகச் சிறந்த படைப்புக்கள் சிறு நாடகங்களே. அவருடைய நீள் நாடகங்கள் அத்தகைய சிறப்பைப் பெறவில்லை. இருப்பினும் சிறந்த நாடகாசிரியருக்குரிய இலக்கணங்களை அவர் பெற்றுள்ளார். எதிர்காலத்தில் அவருடைய நாடகப் படைப்புக்கள் மேலும் சிறப்புடன் விளங்கும் என எதிர் பார்க்கலாம்.

——

இலக்கியம் வாழ்க்கையின் ஒரே தொழிலாகும்பொழுது அது அலுப்பைத் தருவதாக மாறிவிடுகிறது. சில மணி நேரம் மட்டும் அதில் ஈடுபடுவதாக இருந்தால் அது கவர்ச்சியான பொழுது போக்காகும். என் இளம் பருவத்தில் நான் ஒரு 'பாங்கி'யில் குமாஸ்தாவாக இருந்தேன்; ஒவ்வொரு நாளும் காலை பத்திலிருந்து மாலை ஐந்து மணிவரை கட்டாயமாகப் பணியாற்ற வேண்டி இருந்தது. மாலை வீடு திரும்பியதும் நான் எவ்வளவு பெரு மகிழ்ச்சியுடன் எழுதவும் படிக்கவும் செய்தேன் என்பதை என்னல் மறக்க முடியவில்லை.

ரோஜர்ஸ்.

சிறு கதை - என் அனுபவங்கள்

ரரஜம் கிருஷ்ணன்

சிறு கதைகள் எழுதும் விதம் குறித்து நான் புத்தகங்கள் படித்துப் பார்த்தோ, சொற்பொழிவுகள் கேட்டோ, எழுதத் தொடங்கவில்லை. கதை எழுதலாம் என்ற எண்ணம் தோன்றி எழுத ஆரம்பித்து தட்டி முட்டி, எப்படியோ இந்தக் கிளையில் பற்றி வளர முயலுவதுதான் உண்மை.

சிறு கதைகள் பிறக்க பத்திரிகைகள் ஆதரவும் ஊக்கமும் அளிக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனல் இவற்றுடன், கதைகள் எழுத மனதிலே தூண்டுதல் பிறக்கவேண்டியதும் அவசியமாகிறது. ஒவ்வொரு கதையாகத் திரும்பி வந்து குப்பைக் கூடைக்குள் விழுந்தபோது நான் பேனவை விட்டெறியாமல் இந்தத் துறையிலே நிலைக்க முயற்சி செய்ததற்கும், பத்திரிகைக்காரர்கள் நினைத்தபோது, அவர்கள் கேட்கும் மாதிரியான வகைகளில் கதைகளை எழுத முடியாமல் இருப்பதற்கும் இந்தத் தூண்டுதலே காரணமாக இருக்கிறது. இந்தத் தூண்டுதல் எப்போது, எப்படி உண்டாகிறது என்பதை வரையறுத்துச் சொல்லுவதற்கில்லை, தூண்டுதல் பிறக்காமலே, பத்திரிகைகளின் தேவைக்குச் சிறு கதைகளைச் சிருஷ்டி செய்யும் சங்கட நிலை வந்துவிடுவதுண்டு. அப்படிச் செய்யும் முயற்சியில் மனதுக்கு நிறைவு உண்டாவதில்லை. அத்தகைய சிறு கதைகளைப் பற்றி நான் இங்கே கூறுவது உசிதமல்ல.

வண்ணக் கலவைகளைக் கொண்டு தீட்டும் ஓர் ஓவியத்தை நாவலுக்கு ஒப்பிட்டால், அநாயாசமான கோடுகளால் ஓர் உயிர்ச் சித்திரத்தை உருவாக்கும் முயற்சியைச் சிறுகதையோடு ஒப்பிடலாம். சிறுகதை எழுத அதிக நேரம் தேவையில்லை; வண்ண ஜாலங்களான வார்த்தைகளின் அடுக்குக் கோவைகளை அள்ளி வீசவேண்டாம். என்னைப் பொறுத்தவரையிலும் அதிகமாகச் சிந்தனை, கற்பனை என்று கூட நான் அலட்டிக்கொண் டிருக்கவில்லை. சிறுகதை எழுதத் துவங்கு முன், அநேகமாக 'இப்படித்தான் எழுதவேண்டும்' என்று திட்டமிட்டுக்கொண்டது மில்லை. முடிவு என்ன என்பதைக் கூட முக்காலும் நான் பேனவைக் கையிலெடுக்கு முன் யோசிப்பதில்லை!

அஞ்சறைப் பெட்டியில் இன்ன இடத்தில் கடுகிருக்கிறது என்பதை, அறிய சமையலறையில் புழங்கும் ஒரு மனைவிக்குக் கண் விழித்துப் பார்க்கவேண்டு மென்பதில்லை. குறிப்பாகவே தேவையான பொருள்களை எடுக்கக் கை தானகவே இயங்கும்.

அதுபோல் கதைக்கான கருத்தும் கருவும் உயிர்த்துத் தூண்டுதல் உண்டானதுமே எழுதும்போது கதைக்கு வேண்டிய தொடர்பான நிகழ்ச்சிகள், கற்பனைகள், சொற்கள் எல்லாமே அநேகமாக வந்து சேரும்.

ஒரு காட்சியை, களத்தை, அங்கு நடமாடும் மக்களைப் பல நாள் பார்த்துக்கொண் டிருப்பேன். மனதின் அடித்தளத்தில் எல்லாமே பதிந்து போயிருக்கும். ஒருநாள் மின்னல்போல் கருத்தும், எழுதத் தூண்டுதலும் உதயமாகும்.

மலைகள் சூழ்ந்த பசும் புல்வெளி - மாடு மேய்க்கும் மலைச் சிறுவன்—அபசுரங்களானலும் இனிய ஓசையாய்ச் செவிகளை நிரப்பும் அவன் குழல்—பசுக்கள்—பால் பண்ணை எஜமானர் - காய்கறித் தோட்ட மேஸ்திரி— எல்லாரும் எனக்குப் பல நாட்கள் பழகிய சூழ்நிலையில் அறிமுகமானவர்களே. எப்போதோ பண்ணை மாடுகளில் ஒன்று

கோணி யூசியைப் புல்லோடு விழுங்கிய தும், மாட்டு வைத்தியர் வந்து அதன் குரல் வளையைக் கீறி எடுத்ததும், நான் கேள் விப்பட்ட சம்பவங்கள். 'கதை' என்ற தூண் டுதல் பிறந்ததும் நிசமாக நடந்ததும் நடக் காததும், நிசம் போன்று கோவையான நிகழ்ச்சிகளாக உயிர் பெற்றுவிட்டன. கதையை எழுதி அனுப்பிய பின், அதிலே நான் குறிப்பிட்ட பாத்திரத்தின் உண்மை யான பெயரையே எப்படியோ குறிப்பிட்டு விட்டதை அறிந்து துணுக்குற்றேன்.

"திரும்பித்தானே வரும்" என்று ஒரு வாறு ஆறுதல் கொண்டு சுறுசுறுப்பை மறைத்துக் கொண்டேன்

கதை வழக்கம்போல் திரும்பிவரவில்லை. மக்களிடையே புகழுடன் உலவும் தமிழ்ப் பத்திரிகையில், அது போட்டியில் தேர்வு பெற்ற மினுக்கோடு, பேர், ஊர், முகவரி முதலிய கொட்டு முழக்கோடு வெளி வந்து விட்டது. சம்பந்தப்பட்ட மனிதரை நான் தினமும் சந்திக்கவேண்டிய நிலை. 'அவருக் குத் தமிழ் படிக்கத் தெரியாது- 'கன்னடக் காரர்' என்று சமாதானம் செய்துகொண் டாலும், நடந்ததையும் நடவாததையும் எழுதி, அவரைக் கதா பாத்திரமாக்கிவிட்ட குற்ற உணர்வு என்னைச் சும்மா விட்டுவிட வில்லை.

அவரிடம் சென்று, "நான் தெரியாமல் ஒரு தப்புப் பண்ணிவிட்டேன். நீங்கள், இந்த வார......" என்று நான் முடிக்கு முன் அவர் முகம் சிவந்துவிட்டது. "தெரி யும்; எனக்குத் தமிழ்ப் படிக்கத் தெரியாது. மார்க்கெட்டில் ஒரு நண்பர் கூப்பிட்டுக் கதையைப் படித்துக் காட்டினர்" என்ருர்.

நல்ல வேளை, சண்டைக்கு வரவில்லை. எப்படியோ, அவர் இன்னமும் நண்பராக இருக்கிருர்!

பல நாட்கள் பழகிப் பார்த்த களமும் மக் களும்தாம் சிறு கதை சமைக்கும் தூண் டுதலை உண்டாக்குவார்கள் என்பதில்லை. காலை ஒன்பது மணி வேளை. நகரத்துக்கும், சுற்றுப்புற ஊர்களுக்கு மிடையே ஓடும் 'ஷட்டில்'வண்டி. பெட்டி முழுவதும் வேலை பார்க்கும் பெண்கள் -- மாணவிகள் கூட்டம். நான் மோதி யடித்துக்கொண்டு வசதியாக ஓரிடத்தை நோக்கி முன்னேறுகையில் ஓர் ஆத்திரக் குரல் என் செவிகளில் விழுந் தது. "யாருக்கடி ஞாயிற்றுக் கிழமை? நமக்கா? அன்றுதான் விழி பிதுங்கும் வேலை நமக்கு. ஓய்வு, உல்லாசம், சீட்டாட் டம் எல்லாம் அவர்களுக்கு!" என்று ஒரு 'உத்தியோக' நங்கை சொல்மாரி பொழிந்துகொண்டிருந்தாள். 'உல்லாச மாக தினமும் சலவைச் சேலையும் அழகுப் பையுமாக வேலைக்கு கிளம்பி விடுகிருர்கள், வீடுகளில் அடைந்து கிடப்பதில்லை' என்று மேலெழுந்த வாரியாகப் பார்த்துக்கொண் டிருந்த என் நெஞ்சில், அந்தச் சொல் மாரி, இந்த இயற்கை யாகிவிடாத வாழ் விலே, சிங்கார உடை, சொகுசு சுதந்தரங் களுக்கப்பால் பொதிந்துள்ள உண்மையை உணர்த்துவது போலிருந்தது.

'ஞாயிற்றுக் கிழமை' அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள்ளே பிறந்து விட்டது.

கலைமகள், 'மஞ்சட் கயிறு' என்ற தலைப் பில் சிறு கதைப் போட்டியை அறிவித்த தும், அச்சமயம் அந்தத் தலைப்பே ஒரு கதையை உருவாக்கத் தூண்டலாயிற்று.

ஒரு வயது சென்ற மனிதர், முதல் மனைவியும் மகளும் பேரன் பேத்திகளும் இருக்கையிலே, இரண்டாந்தாரமாக ஓர் இளம் பெண்ணை மணந்து வந்தார். மூத்த மனைவி ஏதோ மனஸ்தாபத்தினுல் ஆறேழு ஆண்டுகள் கணவருடன் இருக்கவில்லை. அதன் விளைவே, இரண்டாந் திருமணம்.

இரண்டாவது மனைவி வந்ததும் திடீ ரென்று அவள் புறப்பட்டு வந்தாள். அவளை அழகான சாதுவான இல்லாளாக நான் கண்டு பழகி யிருக்கிறேன். கணவனைப் பல

தடவைகள் தற்கொலே முயற்சிக்கு ஆளாக்கும் வகையில் அந்தச் சாதுவும் அரக்கியாகி, பித்தியாகி, ஊர் சிரிக்க நடந்ததை நான் கண்டேன்.

ஒரு நாள் அவள் என் முன், கால் விரல்களில் மஞ்சட் கயிறுகளேப் பிணித்துக் கொண்டு வந்தாள். நான் திடுக்கிட்டு, "என்னம்மா இது?" என்று கேட்டேன்.

"என்ன பண்ணுவது? எங்கேனுலும் நான் ஓடிப்போயிடக் கூடாதே?' என்ருள்.

நடுத்தர வயதைக்கடந்த அவளோடு பழகியிருந்த நான், அவள் மனதின் போராட்டங்களேயும் சங்கடங்களேயும் ஊகித்துப்பார்த்தேன். கஷ்டமாகவே இருந்தது. இது உண்மை.

ஆனல், என்னுடைய 'மஞ்சட் கயிறு' கதாநாயகியாக அவளே நான் தேர்ந்தெடுக்கவில்லே. வறுமையின் கொடுமையால், தந்தைக்கு நிகரான ஒருவருக்கு மனேவியாக வாய்த்த இளம் மனேவியை நாயகியாக்கினேன். மஞ்சட் கயிற்றின் பந்தம், மூத்த மனேவியைத் தடுத்து நிறுத்திய உண்மைக் காரணம் இங்கே ஒரு பேரிரக்க உணர்வைத் தோற்றுவிக்கும் வகையிலே கதை முழுமை பெற வந்தமைந்தது.

சிறு கதையிலே சில நுட்பமான விஷயங்களேப் பளிச்சென்று சொல்ல முடியாது. எழுதும்போது அந்த உண்மை உணர்வு பளிச்சிட, கதையை நீட்டிக்கொண்டு செல்கையிலே, ஒளிந்தும் ஒளியாமலும் இலே மறைவு காய் மறைவாக அது பதிந்துவிடும். ஆனல், "இன்னும் கொஞ்சம் தெளிவாக நீங்கள் எழுதவேண்டும். புரியவில்லேயே?" என்று எனக்குச் சில கடிதங்களும் வந்திருக்கின்றன.

பம்பாய்ப் பட்டணத்தில் முதன் முதலாக நான் அடி எடுத்து வைத்ததும், ஒரே ஒரு நாள் இரவு நான் தங்கிக் கழிக்க, என் சோதரன் ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்ருன். இரவு ஒன்பது மணிக்கு வண்டியை விட்டு இறங்கியதும், புருக் கூண்டுபோன்ற மாளிகை ஒன்றின் ஒற்றையறையில், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழும் இடத்திலே நான் தங்கிய இரவு என்றென்றும் என்னல் மறக்க முடியாதது. பம்பாய் நகரத்தின் இயந்திர வாழ்வை அந்த ஓர் ஒற்றையறை வாழ்விலே பார்த்து விட்ட எனக்கு, அந்தக் குபேர பட்டணத்தில் பின்னர் நான் பார்த்த காட்சிகளும் வாழ்வும் மனதில் தங்கவேயில்லே. ஊர் திரும்பும் வரையிலும் எனக்கேற்பட்ட குடைச்சல் பொறுக்க இயலாததாக இருந்தது. ஒற்றையறை வாழ்வை ஓர் இரவும், ஒரு பகலும் கண்டதன் விளேவே 'முரண்' என்ற சிறுகதை. இத்தகைய 'எழுதினுலே தீரும் குடைச்சல்கள், வேதனேகள்' அநேகமாக அதிகம் அநுபவித்த பின்பே பல கதைகளும் பிறப்பெய்துகின்றன.

பூவிருந்தவல்லி மின் நிலேயத்தைச் சார்ந்து இரண்டொரு ஆண்டுகள் நான் இருந்த காலத்தில் ஒவ்வொரு மாதமும் 'ஏழாந்தேதி' அளிக்கும் உயிர் நாடகங்களேக் கண்டபின் 'ஏழாந்தேதி' பிறந்தது. வாழ்வின் அடிப்படையான தேவைகளேயே இட்டு நிரப்பாத ஊதியத்தைக், 'கடன்காரர்கள்' என்ற பூதங்களுக்கு இரையாக்காமல் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் கையாளும் தந்திரங்கள், மாயங்கள், எத்தனே எத்தனே! பற்ருக்குறையின் மாளாத தொல்லேயினுல் மரத்துப்போன இதயத்துடன் பொய்யான மாயச் சுகபோக ஆசையில் வீழ்ந்து, கட்டிய மனேவியை, குழந்தைகளே அவலங்களாக்கி அலேயவிடும் தொழிலாளிகளின் நிலேயை இந்தச் சம்பள நாள் அறிவுறுத்திய பின், 'எழுதினுலே தீரும்' என்ற நமைச்சல் விடவில்லேயே!

இந்து தருமத்தின் குரு என்ற நிலேயில் உன்னதமான ஸ்தானம் வகிக்கும் ஒரு மனிதர், வேத சாஸ்திரங்களேப் பயின்று, அதை வயிற்றுப் பிழைப்புக்காக நம்பிக்கை

யுள்ளவர்களையும் நம்பிக்கை மாயும் விதத்தில் வியாபாரப் பொருளாக்கிக் காலம் கடத்தும் அவல நிலைக்கு வந்து, நித்திய வறுமையில் உழலுபவர். சிறுமையும் வறுமையும் மனதைக் குறுக்கி அவரை அடிமையாக்கிக் கையேந்தும் நிலைக்குத் தாழச் செய்கின்றதே ஒழிய, கற்றவைகளும் உயரிய ஞானத்தைப் பிறருக்குக் காட்டும் உன்னதமான நிலைக்குரிய பண்புகளும் அவரை உயர்த்தவில்லை. 'உயர்ந்தோன்' என்று கருதப்படுபவன் ஓர் அந்நியரிடம் இச்சிறுமையைக் காட்டிக் கொள்ளும் அவல நிலையை எண்ணி எண்ணி மனது வேதனைப்பட்டது. அந்த உயர்ந்தோனின் உள்ளத்து வறுமையை அகற்றிவிடாது போனால் நிம்மதியேகிடைக்காது என்றுதோன்றியது. என்னால் என்ன செய்ய முடியும்? 'போர்வை'யைச் சிருஷ்டி செய்து ஓரளவு மனச் சுமையை இறக்கிக்கொண்டேன்.

பல்லாவரம் பரங்கிமலை என்று பஸ்களிலோ, ரயில் வண்டிகளிலே பிரயாணம் செய்கையில், செஞ்சாய உதடுகளும் ஃபிராக் அணிந்த கோலமுமாக ஆபீஸ் நங்கையரும், முதிய பெண்களும் ஏறுவார்கள்; அல்லது, இறங்குவார்கள். இவர்களிடையே, ஒரு குடும்பம், உறவு என்று சொல்லிக்கொள்ள முடியாமல் சிதறி வந்த தாயான 'கிளாராவை' நான் கண்டெடுத்தேன். அவளுக்கும் எவனோ ஒருவன் தான் காதல் வாழ்வைத் தந்தான். முறையான மணவாழ்வில்லை. அந்த மைந்தனுக்கு நிறமேது, மதமேது, உறவேது? அவன் எங்கோ வாணிபக்கப்பலில் நீலக்கடல்மேல் நிலையில்லா வாழ்விலல்லவோ சுற்றுகிறான்?

அவனும்...உறவின்றி, பந்தமின்றி, அன்பின்றி, நிலையில்லா வாழ்விலா அலைய வேண்டும்?

"எழுநூறு ரூபாய்ச் சம்பளம் வேணும். நீ சிபாரிசு செய்து வேலை வாங்கிக்கொடு' என்கிறான். 'முப்பது வயசாகிறதே? நான் தண்ணீரிலிருக்கும் மீனம்மா, கரை வாழ்வு ஒத்துவராது' என்கிறானே" என்று கண்களிலே ஏக்கம் படர மொழிந்த அந்தத்தாய், "எங்கிருந்து வருகுவதோ!" என்ற கதை பிறக்கத் தூண்டுதலானாள். (இயல்பான தூண்டுதலிலே பிறந்தாலும், இது பத்திரிகாசிரியர்களுக்குப் பிடிக்காத காரணத்தினால் அச்சேறாமலே தூங்குகிறது!)

இப்படி ஒவ்வொரு கதைக்கும் வரலாறு உண்டு. சிறு கதைகளுக்கு வேண்டிய 'மூலங்களை'த் தேடி எங்கெங்கும் செல்ல வேண்டியதில்லை. முடிவில்லா நாடகங்களாய், என்னைச் சுற்றியுள்ள உலகில் நான் தினம் தினம் காணும் காட்சிகளே, அது வரையிலும் நான் சமைத்துள்ள பல கதைகளுக்கும் உயிர் தந்திருக்கின்றன.

'ஒரு தங்க நகைகள் செய்யும் பத்தரிடம் உதவியாளாக இருந்தவன் தினம் தினம் பட்டறையைக் கூட்டும் தூசுகளைக் கொளுத்திச் சேர்த்த பொன்னை உருக்கினான். ஒவ்வொரு இதழாக இப்படி உருக்கிச் சேர்த்து, முடிவில் ஒரு பொன் மலரை ஆக்கினான்.' என்று, ருஷிய ஆசிரியர் ஒருவரின் இலக்கியக் கட்டுரை ஒன்றில் படித்தேன். அந்த வரிகளே இப்போது என் நினைவில் வருகின்றன.

தூண்டுதலின் இயல்பிலே மலர்ந்த என் சிறு கதைகள், வெற்றியைத் தந்தாலும், அச்சேறாமலே பெட்டியில் தூங்கினாலும் உருவாகும்போது எனக்கு அளவற்ற இன்பத்தைத் தந்தவை; பொன்னின் மென்மலராக எனக்கு நிறைவைத் தந்தவை; இப்போதும் மணமாக அந்த நினைவுகளே என்னுள் பரவசத்தை ஊட்டுகின்றன.

——

நூல்கள் ஆசிரியர்களின் ஒரு கூறைத்தான் விளக்கும்; ஆசிரியர் எப்பொழுதும் தன் நூலைவிட மிகமிக உயர்ந்த நிலையிலேயே இருப்பார்.

—போவி.

தென்மொழி எழுத்தாளர் அறிமுகம்:

பாலாமணி அம்மா

மலபார் பகுதியில் புந்நையூர்குளம் என்ற சிறிய கிராமத்தில் 1909 ஆம் ஆண்டில் பிறந்த பாலாமணி அம்மா, காலஞ்சென்ற கவி நாலப்பாட் நாராயண மேனோன் அவர்களின் மருமகளாவாள். பொதுவான பள்ளிகளில் பயிலாத பாலாமணி அம்மா தன் மாமாவிடம் கல்வி பயின்று மலையாளம், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் புலமை பெற்றார். அக்காலங்களில் நாராயண மேனோனின் இல்லம் இலக்கியம், தத்துவம், சமுதாய சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்து ஈடுபட்ட அறிவாளிகள் மொய்க்கும் இடமாகக் காட்சி யளித்தது. நாராயண மேனோன் மிகச் சிறந்த கவிஞரும், புலவரும் ஆவார். மேலும் அவர் அனைவருடன் நன்கு பழகும் ஆற்றலுடையவர். எனவே பல்வேறு துறைகளிலும் ஈடுபட்ட இளைஞரும் பெரியவரும் அவருடைய இல்லத்தில் குழுமி கருத்துப் பரிமாற்றங்களிலும், விவாதங்களிலும் ஈடுபட்டனர். மேலும், நாராயண மேனோனின் சிறந்த நண்பரான மகாகவி வள்ளத்தோலும் அடிக்கடி அங்கு வந்து சிறப்பித்தார். இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்த பாலாமணி அம்மா சிறுவயதிலிருந்தே கவிஞர்கள், புலவர்களுடன் நன்கு பழக வாய்ப்புத் தோன்றியது. எனவே அவர்களுடைய சிந்தனையையும்,எழுத்தையும் பெரிதும் ஊக்குவிக்கும் கவிதை உள்ளமும், உணர்ச்சிப் பெருக்கும் பிள்ளைப் பருவத்திலேயே பாலாமணி அம்மா அவர்களுக்கு அமைந்து விட்டதில் வியப்பில்லை.

பாலாமணி அம்மா தம் முதல் கவிதைத் தொகுப்பை-மகாகவி வள்ளத்தோல் அவர்களின் முன்னுரையுடன் கூடிய 'கூப்புகை', 1930 ல் வெளியிட்டார். அது தொடங்கி இதுவரை பதினான்கிற்கு மேற்பட்ட கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை: 'தாய்' (ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது), 'ஸ்த்ரீ ஹ்ருதயம்' (பெண் இதயம்), 'பாவனையில்' (கற்பனையில்), 'களிக்கொட்ட' (விளையாட்டுக் கூடை), 'வெளிச்சத்தில்', 'ப்ரணாமம்' (வணக்கம்), 'லோகாந்தரங்களில் (பல்வேறு உலகங்களில்) முதலியன ஆகும்.

1920 லிருந்து 40 வரை இருந்த காலத்தில் மலையாள கவிதை உலகம் வள்ளத்தோல் அவர்களின் கவிதைச் சிறப்பென்னும் மந்திர சக்திக்குள் சிக்கிக் கிடந்தது. இளங் கவிஞர்கள் அனைவரும் அவருடைய நடை, சொற்றொடர்கள் இவற்றுடன் நில்லாது அவர் எடுத்துக்கொண்ட கருத்துக்

கள், தலைப்புக்கள் முதலியவற்றைக் கொண்டே கவிதை இயற்றலாயினர். வள்ளத்தோல் அவர்களுடன் நெருங்கிப் பழகிய பாலாமணி அம்மாவும் இதே முறையை மேற்கொள்வதற்கேற்ற எல்லா வாய்ப்புக்களும் இருந்தும், வள்ளத்தோல் அவர்களையோ அல்லது வேறு எந்தக் கவிஞரையோ பின்பற்றாமல் தனித்தன்மையுடன் கவிதைகள் இயற்றத் தொடங்கியது குறிப்பிடத் தக்கது. துவக்க காலத்திலிருந்து இன்றுவரை பாலாமணி அம்மா இந்தத் தனித் தன்மையை இழக்கவில்லை.

மற்ற கேரளக் கவிஞர்களிடம் இல்லாத ஒரு தனிச் சிறப்பு பாலாமணி அம்மா அவர்களின் கவிதைகளில் ஒப்புவமை இன்றி மிளிரக் காணலாம். மனித இனத்தின்பாலும், மற்றும் உயிருள்ள உயிரற்ற உலகங்கள் அனைத்திலும் பரவிச் செல்லும் தாயன்பே அத்தகைய தனிச் சிறப்பாகும். அவர்களுடைய கவிதைகளின் அடிப்படைக் கருத்தான தாய்மை உணர்ச்சி நம்மை உலகத்தின் மூலை முடுக்குகளுக்கு மட்டுமல்லாது அண்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு சென்று, ஞானிகள் குறிப்பிடும் 'முழுமைக் காட்சியை'ப் புரிந்துகொள்ளச் செய்யும். தாய்மை நிலை வாழ்க்கையின் சிக்கல்களையும், குழப்பங்களையும் நன்கு புரிந்துகொள்ளச் செய்யும் மிகச் சிறந்ததொரு பக்குவ நிலை என்பது அவர் தம் கருத்து. தாய் சேய் தொடர்பைக் கொண்டு வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்களையும் அவர் விளக்கிவிடுகின்றார். 'யசோதை–கண்ணன்' உவமையைக் கொண்டு தாம் சொல்ல விரும்பும் கருத்தை மிகவும் திறம்பட எளிதில் புரியவைக்கிறார். இந்தக் குறியீட்டை அவர் மிகத் திறம்படப் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தி ஒவ்வொரு முறையும் சுவை குறையாத வண்ணம், புத்தம் புதிய அழகுடனும், உருவத்துடனும் பயன்படுத்திப் படிப்பவர்தம் உள்ளத்தைக் கவர்ந்து விடுகிறார்.

நம்பிக்கையுணர்ச்சியும், முயற்சியின் சிறப்பும் அவர்தம் கவிதைகளின் மையக் கோடாக விளங்கக் காணலாம். இதில் ஒன்றும் புதுமையில்லையே என்று சொல்லி விடலாம். உபநிஷத்துக்களிலிருந்து நம் நாட்டு இலக்கியங்களில் தொன்று தொட்டு இக்கருத்துக்கள் வலியுறுத்தப்படுவதைப் பார்க்கலாம். இருப்பினும் அவை பாலாமணி அம்மாவின் கவிதைகளில் தனிச் சிறப்புடன் விளங்கக் காணலாம். அன்றாட வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் அல்லது பெறப்படும் மகிழ்ச்சிகள் அவர் தம் கவிதைகளில் உயர்ந்ததொரு நிலையில் முழுமையான இன்பத்தைத் தரும் காட்சிகளாக உயர்த்தப்படுகின்றன. உண்மையில், அன்றாட வாழ்க்கையில் காணப்படும் பொருள்கள் பெரும்பாலும் விடப்படாமல் அவர்களுடைய கவிதைகளில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

மொத்தத்தில் அவர்தம் கவிதைகளில் தோய்ந்துள்ள கற்பனைச் செறிவு உணர்ச்சிக் குறிப்புக்கள், கருத்தாழம் முதலியவற்றை உற்று நோக்குவோர்க்கு அவர் ஞானிகளின் காட்சித் திறனையும், சொற்செறிவையும் பெற்றிருப்பதாகத் தோன்றும். இருப்பினும் அவர் ஞானக்கவிஞர் (Mystic Poet) என்று திறனாய்வோரால் குறிக்கப் படவில்லை. எனினும், பாலாமணி அம்மாவின் கவிதைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் இந்தத் தனித்தன்மையையும் உணர்ந்திருக்கவேண்டும்.

'குட்டிகளிடையில்' (குழந்தைகளிடையே) என்ற கவிதையில் தாயின் பரிவையும், மகிழ்ச்சியையும் மிகத் தெளிவாக விளக்குகிறார். "கதிரவன் கதிர்கள் என் சமையலறைக்குள் வந்து குழந்தைகள்போல் என்னைச்சுற்றி விளையாடுகின்றன! புறாக்கள் 'ஏதாவது சாப்பிடத் தருமாறு' கெஞ்சுகின்றன; என்னைச் சுற்றிச் சுற்றி வரும் பூனை 'எனக்கேதாவது இருக்கிறதா?' என்று கேட்கிறது"—இவை அனைத்தும்

புதிய கண்கொண்டு பார்க்கப்படுகின்றன. கவிஞர் தன்னை நோக்கியே ஒரு வினு எழுப்புகிருர்: "முன்பு எப்பொழுதும் இல்லாத வகையில் ஏன் என் கண்கள் பரிவுடன் நீர் கசியச் செய்கின்றன?" அதற்கு மாற்றமும் தருகிருர்: "பாலுண்டு உறங்கும் என் குழந்தையை உற்றுப் பார்க்கும் பொழுது, என் இதயத்தில் யாரோ அதற்குரிய பதிலை வரைவதை உணர்ந்தேன், 'இந்த அனைத்துலக ஆத்மா உன் அன்புக்குரியதாக எப்பொழுது உண்டாயிற்ருே அப்பொழுதே நீ அனைத்துலகத் தாய்மையை (Universal Mother-hood) அடைந்து விட்டாய்."

'மாத்ரு ஹ்ருதயம்' என்ற மற்ருெரு கவிதையில், குழந்தையைப் பெற்றெடுத்து வளர்த்து விட்டால் மட்டும் போதாது என்றும் அக்குழந்தையிடம் பேரன்பு செலுத்துவதால் மட்டும் உண்மையாகத் தாயாகிவிட முடியாது; அழகுள்ளவற்றுடன், அழகற்றவற்றையும், மனிதத் தன்மை உள்ளவரையும், குறைத்தன்மை உள்ளவரையும், சிறியோரையும் பெரியோரையும், எல்லா உயிர்ப் பொருள்களையும் ஏற்றுக் கொண்டு உண்மையான அன்பைச் செலுத்தக்கூடிய வகையில் தாயின் இதயம் விரிவடையவேண்டும்: "அனைத்துலகத்துக்கும் தாயாகும் பொழுதுதான், நான் உன்னைப் பெற்றதன் பயன் துய்ப்பேன்... கண்மணி! உன்னைப் போலவே இந்த உலகம் முழுவதையும் ஒரே நோக்குடன் என்று நான் காணப்போகிறேன்? அன்று தான் யுக யுகாந்தரங்களாக உருவாக்கப் படும் முழுமை நிறைந்த இதயமாக என் இதயம் சிறக்கும்'' என்று தொடர்ந்து அப்பாடலில் கூறுகிருர். அனைத்துலக அன்பை வளர்க்கப் பரிணமச் சக்திகள் எவ்வாறு பணிபுரிந்து வந்துள்ளன என்பதை வெகு நுட்பமாக விளக்குகிருர்.

கவிஞர் பாலாமணி அம்மாவின் கவிதைத் தொகுப்பான 'சோபானம்' (படிகள்) தனியாகக் குறிப்பிடத்தக்கது. ஒரு கவிஞரின் உள்ளம் பணியாற்றும் தன்மையைத் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கவல்லது இக்கவிதைத் தொகுப்பு. எந்தக் கலைப் படைப்பாயினும் அதில் மூல ஆசிரியரின் உள்ளப் பாங்கு நன்கு பிரதிபலிக்கப் படுவதைக் காணலாம்: அவர் தம் கவிதைகளில் விளங்கும் கற்பனைத்திறன், அவர் விளக்கும் நிகழ்ச்சிகளிலும் காட்சிகளும் காணப்படும் அவருடைய உள்ளப்பக்குவம் முதலியன பருவ வளர்ச்சிக்கேற்ப வளர்ந்து சிறப்பதைக் காணலாம். 'நாலுக்கெட்டில்' (இல்லத்தில்),'வழிவாக்கில்'(நாற்சந்தியில்) 'வெளிச்சத்திலேக்கு' (ஒளியை நோக்கி) என்ற சோபானத்தின் மூன்று பகுதிகளும் கவிஞரின் சிறு பருவத்திலிருந்து இன்று வரை அவருடைய உள்ளத்தின் வளர்ச்சியைத் தெள்ளிதின் விளக்கும்.

பிறப்பு, வாழ்க்கை, வீடு பேறு முதலியவற்றின் தத்துவங்கள் பாலாமணி அம்மாவின் 'லோகாந்தரங்களில்' என்ற நீண்ட கவிதையில் தெளிவாக விளக்கப் படுகின்றன. அவர் தம் மாமாவும், குருவுமான காலஞ்சென்ற நாராயண மேனுனின் நினைவுக்காகப் பாடப்பட்டதாக உள்ள இக் கவிதை, உடலிலிருந்து பிரிந்த ஆத்மா கடந்ததையும், நிகழ்வதையும் எண்ணிக் கொண்டே வானத்தின் வழியாகப் பல்வேறு நிலைகளைக் கடந்து மோட்சத்தை அடைவதுபோல சித்தரித்துள்ளார். மற்ற கவிதைகளிலிருந்து மாறுபட்ட இக்கவிதை பொருள் நிரம்பியதொன்ருகும். ஒரு பெரிய யோகியைப் போல இக் கவிதையில் அவர் தம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இதுவே அவருடைய தலை சிறந்த காவியமெனலாம்.

மற்றும் அவருடைய கவிதைகளில் குறிப்பிடத்தக்கவை, 'மழுவிண்டே கத'வும் (மழுவின் கதை) 'விஸ்வாமித்ரா' வும் ஆகும். இரண்டும் தன்மைக் கூற்று (Monologue) வடிவத்தில் அமைந்துள்ளன. 'மழுவிண்

டே கத' பார்கவ ராமனின் (பரசுராமனின்) புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டதாகும். 'பார்கவட்சேத்திரம்'— அதாவது கேரளாவைப் பற்றி வஞ்சப் புகழ்ச்சி கலந்த குறிப்புடன் கவிஞர் பாடியுள்ளார். 'விஸ்வாமித்திரா' நல்ல கருத்துக் களடங்கிய மனங்கவர் கவிதையாக அமைந்துள்ளது.

பிற கவிஞர்களைப் போல பாலாமணி அம்மா ஏராளமாக எழுதிக் குவிக்கவில்லை. அவருக்குக் கருத்தாழம்தான் முக்கியமே தவிர கவிதை அளவல்ல. மற்றும் அவருடைய கவிதைகள் பொதுமக்கள் அனைவராலும் போற்றப் படுகின்றன என்று கூறுதற்கில்லை. அவருடைய நடையும், கவிதை நவிலும் முறையும் பொதுமக்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியனவல்ல. ஆனால் தாம் எடுத்துக்கொண்ட கருத்துப் பொருளுக் கேற்ற நடையையே அவர் பயன்படுத்துகிறார்.

எப்பொழுதும் வெண்கதரையே உடுத்தி கண்ணாடி அணிந்திருக்கும் பாலாமாணி அம்மா தற்பொழுது காளிக் கட்டில் தம் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். அவருடைய கணவர் வி. மாதவன் நாயர் 'மாத்ருபூமி' பத்திரிகைகளின் நிர்வாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். அவர்களுக்கு நான்கு மக்கள் — இரு புதல்வியர், இரு புதல்வர். அவர்களில் கமலம் என்ற ஒரு புதல்வி 'மாதவி குட்டி' என்ற புனை பெயரில் சிறந்த சிறுகதைகள் எழுதி வருகிறார். எழுத்தே தம் குடும்பத் தொழிலாகப் பெற்றுள்ள இக் குடும்பத்தில் கவிஞர் பாலாதணி அம்மா இன்பகரமாகத் தம் வாழ்க்கையைக் கழித்து வருகிறார்.

——

மருத்துவத்துறையைப் போலவே இலக்கியத்திலும் போலிகள் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களில் இரு பிரிவினர் உள்ளனர். சிறப்புத் திறமையற்ற படித்தவர்கள், கருத்தாழமற்ற பிதற்றுபவர்கள் — முன்னவர்களிடமிருந்து இரண்டாந்தர அறிவுதான் கிடைக்கும், பின்னவர்களிடமிருந்து முதல்தர அறியாமைதான் கிடைக்கும்.

—கோல்டன்.

*　　　*　　　*

இலக்கியத்தில் இழிவு அந்த நாட்டின் அழிவினை முன் கூட்டி அறிவிக்கின்றது; கீழ் நோக்கிச் செல்லும் பாதையில் இரண்டும் இணை பிரியாமற் செல்கின்றன.

—கேயதே.

டி. வி. கிருஷ்ண சாஸ்திரி

உண்மையான கவிஞர் எப்பொழுதும் இளைஞராகவே இருப்பார்—உணர்ச்சிகளால் மட்டுமல்ல, உருவ அமைப்பிலும் கூட. இக் கூற்று ஒரு வகையில் மிகைப்படுத்தப் பட்டுள்ளது என்று தோன்றலாம். இருந்தாலும் ஒரு தெலுங்குக் கவிஞரைக் காணும் பொழுதாவது இது முற்றிலும் உண்மை என்று தெரியவரும். கிட்டத்தட்ட அறுபத்தைந்து ஆண்டுகள் நிறையப் பெற்ற அவர் இருபது வயது இளைஞரைப் போலவே காட்சி அளிக்கிறார். அவர்தான் திரு. தேவுலபல்லி வெங்கடகிருஷ்ண சாஸ்திரி என்ற தெலுங்கு இளைஞர்களின் இலட்சியக் கவிஞர்.

புலமை மிக்க கவிஞர் பரம்பரையில் பிறந்த அவர் சிறந்த உணர்ச்சிப் பாவலராக விளங்கினார். 1897 ஆம் ஆண்டு கிழக்கு கோதாவரி மாவட்டத்தில், பித்தாபுரம் அருகிலுள்ள சந்தரம்பாலெம் என்ற கிராமத்தில் அவர் பிறந்தார். கொடை உள்ளம் மிக்க பித்தாபுரம் மகாராஜா பல கவிஞர்களை ஆதரித்து வந்தார். கிருஷ்ண சாஸ்திரியின் தந்தையான வெங்கட கிருஷ்ண சாஸ்திரியும் பெரிய தந்தையான சுப்பராய சாஸ்திரியும் பித்தாபுரம் மகாராஜாவின் ஆஸ்தான கவிஞர்களாக இருந்தனர். அவர்களிருவரும் அஷ்டாவதானம், சதாவதானம் முதலிய துறைகளில் பெரிதும் சிறப்புற்று விளங்கியதுடன், பழைய மரபுப்படி பல சிறந்த கவிதைகளை இயற்றினர். இத்தகைய கவிஞர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கிருஷ்ண சாஸ்திரிக்கு சிறந்த கவிஞராவதற்கேற்ற நல்ல சூழ்நிலை அமைந்தது. காகிநாடாவில் அவர் படித்துக்கொண்டிருந்தபொழுது, காலஞ்சென்ற என். சுப்பாராவ் அவர்களின் பயனுள்ள தொடர்பு அவருக்கு உண்டாயிற்று. கிராமிய மக்களின் மொழியிலேயே அமைந்த சிறந்த கவிதைகளான 'வெங்கி பாடலு' முதலியவற்றை இயற்றிய பெருமையுடையவர் என். சுப்பாராவ். மற்றும் அவர் படித்த கல்லூரியின் தலைவரான மகரிஷி ஆர். வெங்கட்ரத்னம் நாயுடு அவர்களின் தொடர்பு கிருஷ்ண சாஸ்திரியின் வாழ்க்கையைப் பக்குவப் படுத்தியது. ஆங்கில இலக்கியத்தில் பெரிதும் புலமை பெற்ற வெங்கடரத்னம் நாயுடு பிரம்ம சமாஜத்திலும் தலைவராக இருந்தார். ரிஷியைப் போல வாழ்ந்து வந்த இவர் தொடர்பு கிருஷ்ண சாஸ்திரியின் கவிதை உள்ளத்தைப் பெரிதும் தூண்டிவிட்டது.

1920, '21 முதலிய ஆண்டுகளில் கிருஷ்ண சாஸ்திரியின் கவிதைகள் 'சாஹிதி' போன்ற முற்போக்குப் பத்திரிகைகளில் வெளி வரலாயிற்று. அவர் முதலில் வெளியிட்ட கவிதைகளே அவருடைய தனித் தன்மையையும், பெரும் ஆற்றலையும்

விளக்குகின்றன. அவருக்கு இத்துறையில் முன்னோடிகளாக இருந்தவர்கள் குருஜாடா, ராயப்ரோலு, அப்பூரி, சிவசங்கர சாஸ்திரி, விஸ்வநாதா முதலியோராவர். அவர்களுடைய கவிதைகள் புதிய பாணியில் அமைந்து சிறப்புடன் விளங்கின. ஆனால் அழகிய நடையும், உணர்ச்சிப் பெருக்கும், கற்பனையும் கலந்துள்ள கிருஷ்ண சாஸ்திரியின் கவிதைகளோ மற்ற எல்லோருடைய கவிதைகளையும் வென்று விட்டன.

கிருஷ்ண சாஸ்திரியின் முதல் கவிதைத் தொகுதியான 'கிருஷ்ண பட்சமு'(கிருஷ்ண பட்சம்) 1925 ல் வெளியிடப்பட்டது. மரபு வழிக் கவிதைகளில் ஊறிப்போன பல கவிஞர்கள் கிருஷ்ண சாஸ்திரியின் கவிதைகளைக் குறை கூறியதுடன், தவறு நிறைந்தன என்றும் பல படியாகத் தூற்றினர். ஆனால் புதுமையில் ஈடுபாடு கொண்ட பலரும் அவருடைய கவிதைகளை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தலைசிறந்தவை என்று வரவேற்றனர். தம் கவிதைகள் பெற்ற எதிர்ப்பைக் கண்ட கிருஷ்ண சாஸ்திரி சிறிதளவும் கவலைப்படாமல் கவிதையிலேயே பதிலளித்து விட்டார் :

"சிரிப்பவர் சிரிக்கட்டும்,
கவலை எதற்கு எனக்கு ?
செல்கின்றேன் என் வழியே
பயம் எதற்கு எனக்கு ?
ஏன் எனக்கு வெட்கம் ?
இறங்க மாட்டேன் வானிலிருந்து
நான் இம்மண்ணிற்கு.''

"உண்மையில் தனித்தன்மை உள்ள கவிஞனை அவன் காலத்து மக்கள் புரிந்து கொள்ளவோ, பாராட்டவோ மாட்டார்கள்'' என்று டி. எஸ். எலியட் கூறியது கிருஷ்ண சாஸ்திரியைப் பொறுத்தவரை முற்றிலும் உண்மையாகவே உள்ளது.

அவருடைய கவிதைகளில் கீட்ஸ், ஷெல்லி போன்ற மேலைக் கவிஞர்கள், மற்றும் தாகூர் முதலிய பெருங்கவிஞர்களின் பாடல்களின் புதுமை இருக்கக் காணலாம். ஆனால் சாஸ்திரியின் கவிதைகள் தனித்தன்மையுடன், துடிதுடிப்புடன் விளங்கக் காணலாம்.

அவருடைய இளமைப் பருவம், அறிவு மிக்க மக்கள் மனதில் ஒரு சலசலப்பு மிகுந்திருந்த காலமாகும். நாட்டின் விடுதலைப் போராட்டம் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விடுதலை வேட்கையுடன், சமுதாயம், இலக்கியம், கலைகள் போன்ற துறைகளிலும் பழைய கட்டுக்களிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற துடிதுடிப்பும் மிக்கிருந்த காலம் அது. உயர்ந்த, அழகிய, இன்பமான பலவற்றிற்காக ஏங்கித் தவித்தன மக்களின் உள்ளங்கள். அத்தகைய வேட்கைகளை யெல்லாம் நிறைசெய்யும் வகையில் அமைந்திருந்தன அவருடைய கவிதைகள். உயர்ந்த அன்பைக் காதலாக உருவகித்து அவர் பாடியுள்ளார். அந்தக் காதலுக்குரிய நாயகிக்கு ஊர்வசி என்ற பெயர் தந்துள்ளார். 'ஊர்வசி ப்ரவாசமு' என்ற அவருடைய கவிதைத் தொகுப்பு பிரிவுத் துன்பத்தை உணர்ச்சி ததும்ப விளக்கும் கவிதைகளைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. இங்கு 'ஊர்வசி'ஒரு தனிப்பட்ட பெண்ணல்ல, உலகில் உள்ள அழகு, சிறப்பு, இன்பம் அனைத்தும் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்ட ஒரு பிம்பமே ஆகும். வாழ்க்கையில் காதல், பிரிவு முதலியவற்றில் அவர் பெற்ற அனுபவங்கள் அனைத்தும் பொது வடிவம் தரப்பட்டு கற்பனை குழைத்துக் கவிதைகளாக வழங்கப்பட்டுள்ளன.

சிறுகச் சிறுக சாஸ்திரியின் கவிதையின் கருப்பொருள்கள் மாறலாயின. தாய் நாடான பாரதத்தைக் குறித்தும், விடுதலை வேட்கை ததும்பும் பல அருமையான பாடல்களையும் அவர் பாடியுள்ளார். அவருடைய பக்திப் பாடல்கள் இசைச் சிறப்பு நிறைந்துள்ளன. அப்பாடல்களின் கவி

தைத் தொகும்பு 'மஹதி' (நாரதர் வீணை) என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான அவருடைய இசைப் பாடல்கள் ஆந்திராவெங்கும் பரவி, பலராலும் பாடப்பட்டு வருகின்றன.

அவர் சில ரேடியோ நாடகங்களை எழுதியுள்ளார். சுவை நிரம்பிய இந்த நாடகங்கள் திரும்பத் திரும்ப ஒலி பரப்பப்படுகின்றன. அவற்றின் கருப்பொருள்கள் பெரும்பாலும் வைணவ சமயப் பெரியார்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டவை. 'குஹ', 'ஆண்டாள்', 'கிருஷ்ணஷ்டமி' முதலியன அவருடைய தலைசிறந்த ரேடியோ நாடகங்கள்.

கிருஷ்ண சாஸ்திரி வேளியிட்ட பல படைப்புக்கள் இன்னமும் நூல் வடிவத்தில் வெளிவராமலுள்ளன. அவர் படைப்புக்களின் தொகுப்புக்கள் தொடர்ந்து அண்மையில் வெளிவர இருக்கின்றன.

தம் கவிதைகளைப் படிக்காத பல மக்களையும் கிருஷ்ண சாஸ்திரி தம் நாவன்மையினால் கவர்ந்துள்ளார். அவர் மிகச் சிறந்த சொற்பொழிவாளரும் ஆவார். அவருடைய கவிதைகள் உயர்ந்தகருத்துக்களுடன் படித்தவர்க்கு மட்டுமே புரியக் கூடிய வகையில் உள்ளன. ஆனால் அவருடைய சொற்பொழிவுகளோ எளிமையும், கவர்ச்சியும் மிக்கனவாய்ப் பாமர மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. சுவையுடன் கூடிய அவர் சொற்பொழிவுகளில் நகைச் சுவையும், கவின்மிக்க கருத்துக்களும், கவிதை நயமும், சில சமயங்களில் அங்கதக் குறிப்புக்களும் நிறைந்திருக்கும். அவர் எங்கு சென்றாலும் மக்கள் கூட்டங்களிடையே சொற்பொழிவாற்றுவது அவருக்கொரு பொழுதுபோக்கு. அவருடைய வானொலிப் பேச்சுக்களும் கவிதை நயத்துடன் சிறந்து விளங்குவன. நண்பர்களிடையே மகிழ்ச்சியுடன் பேசிப் பயனுள்ள வகையில் பொழுதைப் போக்குவதில் அவர் வல்லவர்.

அவர் சில தெலுங்குத் திரைப் படங்களுக்குப் பாடல்களும் வசனமும் தந்துள்ளார். குறிப்பாக அவருடைய திரைப் படப் பாடல்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் பொதுமக்களிடையே நன்கு பரவி எல்லாராலும் பாடப்படும் சிறப்பைப் பெற்றுள்ளன. அண்மையில் அவர் ஹைதராபாத் வானொலி நிலையத்திலிருந்து, 'சுப்பம்மவ்வா' என்ற நகைச்சுவை ததும்பும் புதினத்தைத் தொடர்ந்து ஒலி பரப்பி வருகிறார்.

கிருஷ்ண சாஸ்திரியின் ரசிகர்களில் சிலர் அவருடைய பிற்காலத்திய எழுத்துக்கள் அவருடைய துவக்ககால எழுத்துக்களைப்போல தரம் வாய்ந்தனவாக இல்லை என்று கருதுகின்றனர். 'வானிலிருந்து இம்மண்ணிற்கு இறங்கமாட்டேன்......' என்ற அவர் கூற்றுக்கு எதிரிடையாக இப்போக்கு உள்ளது என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் அவரைப் பொறுத்தவரை அதை முன்னேற்றமாகவே கருதுகிறார். மனிதாபிமானம் மிக்க அவர் உள்ளத்திலிருந்து உதிப்பவற்றை எல்லோரும் புரிந்துகொண்டு இன்புற வேண்டுமென்று விழைவது தவறாகுமா?

அறுபத்தைந்தாண்டுகள் நிறையப்பெற்ற திரு. கிருஷ்ண சாஸ்திரி தற்பொழுதும் ஹைதராபாத் வானொலி நிலையத்தில் பணியாற்றிக்கொண்டே, எழுத்துப் பணியையும் தொடர்ந்து சிறப்புடன் நிறைவேற்றி வருகிறார்.

———

சிவராமகாரந்த்



"ஆடு உண்ணுத மூலிகை இல்லே, காரந்த் செய்யாத தொழிலில்லே'' என்பது கர்ஞடகத்தில் பொதுவாக வழங்கி வரும் புதுமொழி யாகும் காரந்த் அவர்களின் பல்வேறு திறப்பட்ட வெற்றிகளேயும், முயற்சிகளேயும் விளக்குவதே இப் புது மொழி. பெரிய நிறுவனங்கள் கூட முடிக்க முடியாத பல செயல்களேச் சாதித்துள்ளார் திரு. காரந்த். 'பால பிரபஞ்ச' (குழந்தை களுக்கான கலேக் களஞ்சியம் – மூன்று தொகுதிகள்) கன்னட - கன்னட அகராதி' (கன்னட மொழியிலேயே முதல் அகராதி), 'விஞ்ஞான பிரபஞ்ச' (தற்பொழுது தயாரிப்பிலுள்ள பொது மக்களுக்கான விஞ்ஞான கலேக் களஞ்சியம்ஐந்து தொகுதிகள் ஆகியவை அவருடைய சிறப்பினேத் தெள்ளிதின் விளக்கும்.

காரந்த் சாதித்தவை எவை யென்று தொகுத்துக் கூறுவதை விட, காரந்த் கை வண்ணம் தோயாதவை எவை யென்று சொல்வதே எளிது. ஓவியம், நாடகக் கலே, ஒளிப் படக் கலே, திரைப் படக் கலே, அரசியல், சமுதாய சீர்திருத்தம்—இன்னும் எத்தனேயோ துறைகளில் அவர் திறம்படச் செயலாற்றியுள்ளார். இருப்பினும், அவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தது எழுத்துத் துறையே ஆகும். குறிப்பாக, கன்னட மொழியில் அவருக்கு ஈடான நாவலாசிரியர்கள் இல்லே யென்பது மிகையாகாது. கன்னட மொழி உள்ளளவும் அவர் புகழ் நிலே பெற்றிருக்கும்.

காரந்த் மிகவும் பிடிவாதக்காரர். அவருடன் ஒத்துப் போவது பலருக்கும் கடினமானது. அவர் உறுதியான கொள்கைகளுள்ளவர்; மக்களேப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் தாம் கொண்டுள்ள எண்ணங்களில் திடமான நம்பிக்கை யுள்ளவர். அவருடைய சொற்கள் கத்தியைப்போல் கூர்மையாக வெட்டக் கூடியவை. ஒளிவு மறைவில்லாத உள்ளத்தி லிருந்து அவை வெளி வருகின்றன. அவர் புகழும்பொழுதும் அப்படியே. யாராவது ஒருவர் மிகச் சிறந்த ஒன்றை முயற்சித்தாலே போதும், அவரைப் பல படியாகப் புகழ்ந்து விடுவார். அவர் தம்முடைய முயற்சியில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகக் காரந்த் எதிர்பார்த்திருப்பதில்லே. குறை கூறுவதாயினும், புகழுவதாயினும் அவருடைய முறையே அலாதியானது. அவர் உலகஞ் சுற்றிப் பல நாடுகளேயும், மக்களேயும் கண்டு மீண்டவர்; சிறந்த பல காரியங்களேச் சாதித்தவர். இத்தகைய ஒருவர் பிறருடைய சிறிய முயற்சிகளேயும், சாதாரண அன்ருட

நிகழ்ச்சிகளையும் சிறப்பித்துப் பேசுவதென்பது வியப்பாக உள்ளது.

காரந்தின் பெருஞ்சிறப்புக்கு அவருடைய நாவல்களே முக்கியக் காரணம் என்று கண்டோம். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் நாவல்கள் எழுதத் தொடங்கி 25 க்கு மேற்பட்ட நாவல்கள் எழுதியுள்ளார். அவருடைய உயர்ந்த திறனும், பழுத்த அனுபவமும் அவற்றில் பிரதிபலிக்கப் படுகின்றன. அவருடைய முதல் புதினமான 'கன்யா பலி'யி லிருந்து, அண்மையில் வெளி வந்த 'ஆழ—நிராழ' (ஆழமும் ஆழமற்ற தன்மையும்) வரை அவருடைய புதினங்கள் யாவும் பெருஞ்சிறப்புடன் திகழக் காணலாம். மேலும் தொடர்ந்து இப்பணியைச் செய்துகொண்டே உள்ளார்.

காரந்தின் நாவல்களில் 'மரளி மண்ணிகே' (மறுபடியும் மண்ணிற்கு) என்பது அவருடைய தலை சிறந்த படைப் பாகும். இந்தப் புதினம் தென்—கனரா பகுதி மக்களின் வாழ்க்கையையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அப்பகுதிமக்களின் பேச்சு மொழியும் தனிப்பட்ட சொல் வழக்குகளும் இதில் நன்கு பயன் படுத்தப் படுகின்றன. மற்றும், இந்தியப் பெண்மை, இலட்சியத் தன்மையிலல்லாமல், உண்மைத் தன்மையுடன் விளக்கப்படுவதைக் காணலாம். இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு பத்தாண்டுகட்கு முன்னர் வெளியிடப்பட்டது. மற்ற இந்திய மொழிகளில் இதன் மொழி பெயர்ப்பு வெளிவருவதற்கான ஏற்பாடுகளைச் சாகித்ய அகாதெமி செய்து வருகிறது.

அவருடைய மற்றொரு சிறந்த புதினம் 'பெட்டத ஜீவா' (மலை வாழ்க்கை) என்பதாகும். மலை மீது வாழ்ந்து வரும் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கிறது இப்புதினம். ஒரு தனி மனிதனின் வாழ்க்கையை ஒரு நாவலாக உருவாக்கிய சிறப்பு இங்கு கவனிக்கத் தக்கது. குணங்களை வர்ணிக்கும் திறன், இயற்கைச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்ட அமைப்பு, கதை அமைப்பு முதலியவை இப்புதினத்தில் சிறப்புடன் விளங்கக் காணலாம். இப்புதினம் அளவில் சிறிதெனினும் சிறப்பில் பெரிது என்பதில் ஐயமில்லை. அண்மையில் இதன் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிடும் முயற்சியில் ஒரு நியூயார்க் பதிப்பாளர் ஒருவர் ஈடுபட்டுள்ளார்.

'சோமன துடி' (சோமனின் துடி—ஓர் இசைக்கருவி) என்ற அவருடைய குறுநாவல் சுமார் இருபதாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. அது உரை நடை வடிவத்தில் உள்ள உணர்ச்சிப் பாடலாகும். சோம என்ற ஒரு ஹரிஜனுடைய வாழ்க்கையை அது சித்தரிக்கிறது. அவனுடைய நம்பிக்கைகள், அச்சங்கள், இயற்கையான ஆசைகள் முதலியவை உள்ளத்தைத் தொடும் வகையில் நவிலப்பட்டுள்ளன. அவனுடைய அவல வாழ்வு படிப்பவர் உள்ளத்தை நெகிழச் செய்யும்.

'குடியர கூசு' (குடியரின் குழந்தை) என்ற புதினம், மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் புராதன குடிமக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு அமைந்துள்ளது. ஒரு வகையில் குடியரின் வாழ்க்கையை விவரிக்கும் பெருங் காவியமாக இது விளங்குகிறது. இயற்கையும், காட்டு விலங்குகளும்கூட அந்தப் புதினத்தில் முக்கியப் பாத்திரங்களாகக் காட்சி அளிக்கின்றன.

காரந்தின் புதினங்கள் கன்னட வயலில் விளைந்த விளைபொருள்கள். கர்நாடக வாழ்க்கையையும், பண்பாட்டையும், இல்வாழ்க்கையையும் அவர் புதினங்கள் திறம்படச் சித்தரிக்கின்றன. அதே நேரத்தில் இந்திய வாழ்க்கையையும், பண்பாட்டையும் அவை பிரதிபலிக்காமல் போகவில்லை. அவர் மேனாட்டு இலக்கியங்களில் நன்கு புலமைபெற்றவர், இருப்பினும் அவர் எழுத்

தில் நம்நாட்டு மணமே வீசும். எந்த ஓர் எழுத்தாளராலும் அவர் பாதிக்கப்படவில்லை. அவருடைய நடை, பாத்திரங்களைக் கையாளும் திறன், கதை அமைப்பு—யாவும் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. கன்னட இலக்கியத்திலேயே அவர் ஒரு தனிப்பட்ட நிலையை அடைந்ததன் இரகசியம் இதுதான். இந்தத் துறையில் அவரைப் பின்பற்றி அவரைப்போலவே எழுதுவதும் கடினமாகும்.

உள்ளதை உள்ளவாறே சித்தரிப்பது காரந்தின் தனி இயல்பு. வாழ்க்கையை மிகத் திறம்பட விஞ்ஞானியைப்போல் அவர் அலசி ஆராய்கிறார். அவருடைய பாத்திரங்கள் அதிகமாகப் பேசுவதில்லை; ஆனாலும் அவர்களுடைய குணச் சிறப்புக்கள் தெள்ளிதின் விளங்கிவிடும். அவருடைய ஒவ்வொரு புதினத்திலும் இயற்கை ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சுருங்கச் சொன்னால் இயற்கையே அவருடைய புதினங்களில் முதல் நிலையையும் முக்கிய இடத்தையும் பெற்று விடுகின்றது. மற்றும் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் நின்று கண்டு, உண்மைகளைச் சற்றும் திரிக்காமல் கூறும் இயல்புடையவர் அவர். அவர் கதைகளில் பெரும்பாலானவை உண்மை நிகழ்ச்சிகளே அன்றி கற்பனையல்ல. வாழ்க்கைப் பிரச்சினைகளில் அவர் கொண்டுள்ள அக்கறையே அவருடைய எழுத்தை இவ்வாறு பாதித்துள்ளது. இதனால்தான் போலும் அவருடைய கதைகளில் அலுப்பைத் தரும் ஒரே தன்மையான நிகழ்ச்சிகளின்றி பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் காண இயலுகின்றது.

காரந்தின் மற்றொரு முக்கிய இயல்பு, தம்முடைய சொந்தக் கொள்கைகள், குறைகள், நிறைகள் முதலியவற்றைத் தம் பாத்திரங்களின் மீது சுமத்திவிடுவதில்லை.

காரந்த் அங்கதக் குறிப்புடன் எழுதுவதில் வல்லவர். அவருடைய அங்கத இலக்கியங்கள் தனிப்பட்ட சிறப்புடையவை. 'தேவதூதரு', 'ஹள்ளிய ஹத்து சமஸ்தரு' (கிராமத்தில் பத்து பெரிய மனிதர்), 'கர்பகுடி' (மூலஸ்தானம்—அங்கத நாடகம்) முதலியவை அவருடைய அங்கத நூல்களில் மிகச் சிறப்பு வாய்ந்தவை. அவருடைய அங்கதத்தின் வன்மையை விளக்கப் போந்த அவருடைய ஓர் இலக்கிய நண்பர். 'எல்லாப் பக்கங்களிலும் உதைக்கும் கழுதை' என்று அவரைக் குறித்துள்ளார்.

இவை தவிர சில ஓரங்க நாடகங்களையும், இசை நாடகங்களையும் காரந்த் எழுதியுள்ளார். 'கிசா கௌதமி என்பது போன்ற சில இசை நாடகங்களை அவரே தயாரித்து மேடைகளில் அரங்கேற்றினர். மற்றும், 'அபூவி நிண்ட பாராமக்கெ' (அபூவிலிருந்து பாராம வரை), 'அபூர்வ பஸ்சிம' (கிழக்கல்லாத மேற்கு) முதலிய பிரயாண நூல்களையும் இயற்றியுள்ளார். கன்னட இலக்கியத்தை இவை ஓரளவு வளம்படுத்தியுள்ளன. 'பித்து மனதின் பத்து முகங்கள்' என்ற அவருடைய சுயவாழ்க்கை வரலாறு அவர் பெற்ற அரிய அனுபவங்களை நன்கு விளக்குகிறது.

காரந்த் பல துறைகளிலும் சோதனை செய்து பார்த்துள்ளார். நாடகம், நடனம், ஓவியம், திரைப் படம் முதலிய பல கலைகளிலும் அவர் முயற்சித்துள்ளார். அரசியலும் சமுதாய சீர்திருத்தமும் அவர் கைவண்ணம் பெருமலில்லை; இத்தகைய முயற்சிகள் சிலவற்றில் அவர் தோல்வியும் கண்டுள்ளார். ஆனால் தோல்விகள் அவர் மனதில் எத்தகைய ஒரு குறையையும் உண்டாக்கவில்லை. அவர் குணமும், திறனுமறிந்து ஆவன செய்யும் சிறந்த மனைவியைப் பெற்றது அவருடைய நற்பேருகும். லீலா காரந்த் என்ற பெயருடைய அவரும் தம் கணவரைப் போன்றே கலை ஆர்வம் மிக்கவர்—நன்கு நடனமாடக் கூடியவர், எழுதுவதிலும் வல்லவர்—தம் கணவனைப் பற்றிய ஒரு வாழ்க்கை வரலாறும், பல சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

சாஹித்ய அகாதமி 1960 ஆம் ஆண்டு' யக்ஷகான பயலாடா' (திறந்த வெளி யக்ஷகான நாடகங்கள்) என்ற கர்ணாடக நாடோடி நடன-நாடகங்களைப் பற்றிய அவருடைய சிறந்த நூலிற்கு ரூ. 5000 பரிசளித்து சிறப்பித்தது. ஸ்வீடிஷ் நாடோடி நாட்டியக் கழகமும் அதே நூலிற்குப் பரிசளித்து ஸ்வீடிஷ் மொழியில் மொழி பெயர்க்க வேண்டிய ஏற்பாடுகள் செய்துள்ளது. மைசூர் அரசாங்கமும் அண்மையில் அவருடைய இந்த நூலிற்கு ரூ. 1500 பரிசளித்துள்ளது,

1955 ஆம் ஆண்டு கன்னட இலக்கிய மாநாட்டிற்கு அவர் தலைவராக வீற்றிருந்து சிறப்பித்தார். அறுபது வயது நிறைவெய்திய அவர், இப்பொழுதும் இளைஞர் போல பல புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். அண்மைக் காலத்தில் அவர் எழுதிய 'அளித மேலே' (சாவிற்குப் பிறகு) என்ற நூல் அவருடைய மிகச் சிறந்த நுட்ப அறிவைத் தெள்ளிதின் விளக்கும். அவருடைய ஆக்கச் சக்தி பெருக்கெடுக்கும் ஊற்றைப்போல் குறைதலின்றி வளம் சுரந்து கொண்டே உள்ளது.

——

THE INDIAN BANK LTD.,

(Established in 1907)

REGD. OFFICE: INDIAN CHAMBER BUILDINGS, ESPLANADE, MADRAS-1.

Offers complete Banking service of every description, backed by more than 54 years of sound experience.

Has a net work of 145 offices (24 situated in the city of Madras, 5 Overseas and 116 spread over 8 States in the Indian Union) and is fully equipped to advise and help regarding deposits, advances, remittances, collections, foreign exchange business etc.

		Rs.
Authorised Capital	...	1,00,00,000
Subscribed Capital	...	81,60,000
Called & Paid-up Capital	...	82,99,975
Reserve Fund	...	68,44,584
Share Premium	...	14,57,300
Deposits as on 31—12—61	...	40·05 Crores

DIRECTORS :

Dr. Rajah Sir M. A. Muthiah Chettiar of Chettinad, Kt. B. A., D. Litt.
Kumararajah Sri M. A. M. Muthiah Chettiar of Chettinad, B. A.
Dr. P. V. Rajamannar D. Litt., LL. D.
Sri K. Balasubramania Aiyar B. A., B. L., M. L. C.
Rao Bahadur T. S. Kachapikesa Mudaliar B. A.
Sri A. Nagappa Chettiar.
Sri Ramdas Purushottamdas
Sri P. V. RM. Kulandayan Chettiar
Sri L. Alagusundaram Chettiar
Sri R. K. Vankatachalam
Sri O. M. SP. L. M. Meyyappa Chettiar

G. S. SUNDARAM
Secretary.

புத்தகப் பூங்கா

ரேடியோ செய்ய வழிகாட்டி
விலை: ரூ 2–50

ரேடியோ செப்பனிட வழிகாட்டி
விலை: ரூ. 3–50

ஆசிரியர்: M. கான்முகம்து
தொழிற் கல்லூரி
35-36 வடக்கு சித்திரை வீதி,
மதுரை–1.

இவ்விரு புத்தகங்களில் ஒன்று எப்படி வானொலிப் பெட்டியை உருவாக்குவது என்பதை விவரிக்கின்றது. பின்னது எப்படி வானொலிப் பெட்டியைப் பழுது பார்ப்பது என்பதை எடுத்துக் கூறுகிறது. முன்னே குறிக்கப்பட்ட நூலில் வானொலிப் பெட்டியின் பல்வேறு உறுப்புக்கள், அவற்றின் வேலைகள் ஆகியவை சொல்லப்பட்டிருப்பதோடு வானொலியின் தத்துவமும் ஓரளவு விளக்கப்பட்டுள்ளது. சிறப்பாக, வானொலி நிலையத்தார் பயன்படுத்தும் குற்றலைகள், இடையலைகள் பற்றித் தெளிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்தியாவில் நெட்டலை பயன்படுத்தப்படுவதில்லையாதலால் அதுபற்றி அதிகமாக விவரிக்காமல் ஆசிரியர் சென்றிருக்கின்றார்.

மேலும் வானொலிப் பெட்டியைப் பொறுத்த செய்திகளான மின் அலைகளைத் திரட்டுதல், மாற்றுதல், கேள்வி அலைகளாகச் செய்து இறுதியில் ஒலி உருவம் கொடுத்தல், ஆகிய பல நிலைகளும், அவற்றிற்குரிய உறுப்புக்களும், அவற்றை இணைக்கும் வகைகளும் எளிமையான நடையில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தைப் படிப்பவர்கள் எல்லோரும் தாங்களே வானொலிப்பெட்டி செய்வதற்கு முன்வராது போனாலுங்கூட வான்கம்பியை எவ்வாறு எத்திசையில் அமைப்பது, தரைக்கம்பியை எவ்வகையில் எப்படி இணைப்பது போன்ற எளிய, ஆனால் இன்றியமையாது வேண்டப்படுகின்ற உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் அறிவியல் உணர்வினைப் பெற்றுவிடுவர் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் கையாண்டிருக்கும் எளிய நடையும், ஆங்காங்கே கொடுத்திருக்கும் தெளிவான சுற்று வழிப்படங்களும் "ஏன் நாமும் ஒரு வானொலிப் பெட்டி செய்து பார்க்கக்கூடாது?" என்று படிப்பவரைத் தூண்டுவனவாக உள்ளன.

முதல் புத்தகத்தினும் இரண்டாவது புத்தகம் பலர்க்கும் இன்றியமையாதது என்று சொல்லத் தேவையில்லை; வானொலிப் பெட்டி செய்பவர் சிலராக இருந்தாலும் வானொலிப் பெட்டி வாங்கி வைத்து மகிழ்பவர் பலராக இருக்கின்றனர். சிற்சில சமயம் வானொலிப் பெட்டி வெறும் பெட்டியாக வாய்மூடி விடும்போதோ, அல்லது குளிர் சுரம் கண்டு பிதற்றும் குழந்தை போலக் குரல் எழுப்பும்போதோ பெட்டிக்குரியவர் செய்வதறியாமல் திகைத்து நிற்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆனாலும் சில துணிந்த பேர்வழிகள், உடனே, 'அதனையும் இதனையும்' பிடித்துத் திருப்பி, "அனுபவ வைத்தியம்'' செய்யத் தொடங்கி விடுவர். இதனால் வானொலிப் பெட்டிக்குத் தலைவலி போய் திருகுவலி வந்துவிடுவதும் உண்டு! ஆனால், இத்தகைய நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கேடுற்ற வானொலிப் பெட்டியின் நோய்நாடி, நோய் முதல் நாடி, வாய்நாடி, வாய்ப்பச் செய்யும் அறிவியல் முறையை ஆசிரியர் இந்நூலில் வடிவாக்கித் தந்திருக்கிறார்.

வானொலிப் பெட்டியின் எந்தெந்தக் கருவிகளைத் தொடலாம்; எந்தெந்தக் கருவிகளைத் தொடுதல் கூடாது; எந்தெந்தக் கருவிகளைத் தொடுவதால் கருவிகளுக்கு ஆபத்து; எந்தெந்தக் கருவிகளைத் தொடுவதால் நமக்கு ஆபத்து என்ற செய்திகளையெல்லாம் நகைச்சுவையோடு கூறிச் செல்கின்றார். இந்த நூலில், வானொலிப் பெட்டியின் பல்வேறு உறுப்புக்களின் நிலையையும் உறுப்புக்களுக்கு வரும் கேடுகளையும், அக்கேட்டினைக் கண்டுணரும் வழிவகைகளையும், பின்னர் அவற்றை நீக்கும் நெறிமுறைகளையும் தெளிவாக விளக்கியிருக்கின்றார். வானொலிப் பெட்டி ஒன்றை வாங்குவதோடு மன நிறைவு அடையாமல், அதனை நெடுங்காலம் வைத்துக் காப்பாற்றவும் வேண்டும் என்று விரும்புகின்ற ஒவ்வொருவர் கையிலும் இந்தப் புத்த ம் இடம் பெறுதல் வேண்டும்.

புத்தக நண்பன்

பொதுவாக, மேலே கண்ட இரு நூல்களும் எளிய நடையில், வானொலி பற்றிச் சிறிதே அறிந்திருப்பவரும் கூடத் தாமே படித்து உணரும் வகையில் அமைந்திருப்பது பாராட்டு தற்குரியதாகும். ஆங்கிலக் கலைச் சொற்கள் அதிகமாக இருந்தாலும், இலைகளிடையே எழுந்த மலர்கள் போன்று இடைஇடையே இனிய தமிழ்ச் சொற்களும் இடம் பெற்றுக் கலை மணம் வீசுகின்றது. சிற்சில இடங்களில் காணப்படும் எழுத்துப் பிழைகளும், அடுத்து வரும் பதிப்புக்களில் களையப்பட்டுவிட்டால் நூல்கள் மேலும் ஒளிபெற்றுத் திகழும்.

தொழில் நுட்பத்துறையில் தமிழ்மொழியை இட்டுச் செல்லும் வழிகாட்டிகளாகத் திரு. கான் முகமது எழுதிய இப்புத்தகங்கள் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

கே. எஸ். மகாதேவன்

கற்பனைச் சோலையிலே

தொகுப்பாசிரியர் :
பி. சி. கணேசன்,
பதிப்பாளர் :
எழுத்தாளர் பதிப்பகம்,
புலிவலம் அஞ்சல்
திருவாரூர்.

பக்கம் : 120
விலை : 1-50

இது சிறுகதை யுகம். வாரந்தோறும் பல்லாயிரக்கணக்கான சிறுகதைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் கற்பனைச் செறிவுள்ளவை பல, உள்ளத்தைத் தொடக் கூடியன பல, உயர்ந்த கருத்துக்கள் பொதிந்துள்ளவை பல, சிறுகதைக்கே இலக்கணமாகத் திகழக்கூடியவை சில, ஒரு முறைக்கு மேல் படிக்க முடியாத பயனற்றவை பல—இப்படி எத்தனையோ வகைச் சிறுகதைகள் வாரந்தோறும்—ஏன், நாள்தோறும் வெளிவந்த வண்ணமுள்ளன. இவற்றில் சிறந்தவை சிலவற்றைத் தேர்ந்தெடுத்து ஒரு தொகுப்பாகச் சேர்ப்பது என்பது அவ்வளவு எளிய செயலல்ல. எனினும் அந்தத் தொல்லை மிக்க செயலைத் திறம்பட முடித்துள்ளார் தொகுப்பரசிரியர் பி. சி. கணேசன் தம் 'கற்பனைச் சோலையிலே ..' ஏற்கனவே புகழ்பெற்ற சிறுகதை மன்னர்களின் கதைகளுடன் புகழேணியில் முன்னேற இருக்கும் சில இளம் எழுத்தாளர்களின் சுவைமிக்க கதைகளையும் தொகுத்துத் தந்துள்ள அவர் பணி பாராட்டத்தக்கது.

'கற்பனைச் சோலையிலே' திறன்மிக்க எழுத்து மன்னர்களின் கற்பனையில் பூத்த எழில்மிக்க பன்னிரண்டு கதை மலர்களைக் காணலாம், அந்த மலர்களில் முதற்கண் நம் உள்ளத்தைக் கவர்வது 'கறவையும் காளையும்' என்ற வண்ணமும் மணமும் பொருந்திய மலரே. ஒரு பசு—காளை காதல் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு, மக்கள் தம் பகுத்தறிவைப் பயன்படுத்தி விலங்குகளின் வாழ்க்கையைப் பாழாக்கும் அவல நிலையைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிருர் அகிலன். புதுமையான இக் கதை கருத்தாழம் மிக்குள்ளது.

நம் கண்ணைப் பறிக்கும் அடுத்த வண்ண மலர் நா. பார்த்தசாரதி அவர்களின் 'ஜன்னலை மூடிவிடு' என்பதாகும். நோய் வாய்ப்பட்ட வயது முதிர்ந்த ஒரு தந்தை தன் ஒரே மகளுக்கு மணமுடித்த பின்னர் அவளை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பும் உருக்கமான கட்டம் நம் உள்ளத்தைத்தொடும் வகையில் சித்தரிக்கப் பட்டுள்ளது. அடுத்து நம் கருத்தைக் கவரும் மணம்கூடிய மலர் டி. கே. சீனிவாசன் அவர்களின் 'தேவைப் படாதவள்'. ஆசைகள் துடிக்கும் இளம் பெண்ணின் காதலுக்குக் குறுக்கீடு—அதிலும் வேருெரு பெண் வடிவத்தில் வந்தால் அவள் உள்ளம் என்ன பாடுபடும்? ஆனல் தேவைப்படாமல் போனது அவளா? அவனு? என்பது இறுதிவரைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதொன்று.

அடுத்து, மனத்தை ஈர்க்கும் மலர் ஸ்ரீவத்ஸனின் 'சேவை' யாகும். தன் ஒரே பேத்தி ஆண் ஆதரவின்றி இல்லத்தில் பிரசவ வேதனைப் படும் பொழுதும் கடமை பெரிதென்று கருதி வரதராஜப் பெருமாளின் கருடசேவைப் பணியில் ஈடுபட்டார் பரிமள ரங்க பட்டாச்சாரியார். எப்பொழுதுமில்லாமல் கருடசேவைக்கென வந்த டாக்டர் ரங்கநாயகியோ கஷ்டமான அந்தப் பிரசவத்திற்குத் துணை செய்வதற்கென வீட்டிலேயே தங்கி கருடசேவைக் குரிய வாய்ப்பையும் இழந்துவிட்டாள். இரண்டு பேருடைய சேவையும் ஒன்ருேடொன்று போட்டியிட்டு நம் உள்ளத்தைச் கவர்கின்றன. வைணவப் பரிபாஷையில் அமைந்துள்ள இக் கதையின் நடை அழகுடன் மிளிர்கின்றது,

அடுத்து, மனத்தைக் கவரும் மலர் திருவாரூர் தியாகராசனின் 'புகழ்' ஆகும். புகழேணியின் உச்சியிலிருந்த ஓர் ஏழை எழுத்தாளர் திடீ

ரென்று எழுதுவதை நிறுத்திவிடுவதும், எழுது வதை நிறுத்திய பிறகு மிகப்பெரிய பணக்கார ஞவதும், மிகப் பெரிய கோடீசுவரன் ஒருவன் பெரிய எழுத்தாளனுவதும்–இவை நம்புவதற்குச் சிறிது கடினமாக இருக்கலாம். ஆனால் தொடர் புள்ள இந்நிகழ்ச்சிகளில்தான் 'புகழின்' இரகசியம் அடங்கியுள்ளது.

தி. சிங்காரவேலுவின் 'காதல் பிறந்த கதை' புத்தழகுடன் மணம் வீசுகிறது. கற்பனைக் காதலிக் கெழுதிய காதல் கடிதத்திற்கு உண்மைப் பதிலொன்று கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்? கற்பனை புதுமெருகுடன் மிளிர்கிறது இக் கதையில்.

சுருங்கச் சொன்னல் இத் தொகுப்பில் உள்ள பன்னிரண்டு கதைகளும் ஒன்றுக் கொன்று சளைக்காமல் சிறப்புடனும் சுவையுடனும் விளங்குகின்றன. படிக்கப் படிக்கத் தெவிட்டாத சுவையுடைய இக் கதைகள் இன்றைய தமிழகத்தின் கற்பனை வளத்திற்கும், கதை வளத்திற்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன என்பது மிகையாகாது. மேலும், இத்தகைய நல்ல பல சிறுகதைத்தொகுப்புக்கள் வெளிவருவது படிப்பவர்க்குப் பயன் தருவதுடன், எழுதுவோர்க்கும் சிறந்த தூண்டுகோலாகும்

நல்ல முறையில் உருவாக்கப் பட்டுள்ள இத் தொகுப்பில், தண் மதியில் களங்கம்போல் அங்கங்கு அச்சுப் பிழைகள் சில காணப்படுகின்றன.

பா. பா.

ஆங்கில நூல்கள்

'பிரமிட் புக்ஸ்'—444 மாடிஸன் அவின்யூ, நியூயார்க் 22, வெளியிட்ட கீழ்க் கண்ட மாணவர் பதிப்பு நூல்களை (ஆங்கிலம்) மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்கிரேம்:

(1) 'மைகேல்ஸனும் ஒளியின் வேகமும்' (Michelson and the Speed of light)—ஆசிரியர் பெர்னர்ட் ஜாஃப்—நோபல் பரிசு பெற்ற முதல் அமெரிக்கரான ஒரு சிறந்த விஞ்ஞானியின் வாழ்க்கை வரலாறு பௌதிக ஆராய்ச்சித் துறையில் அவருடைய பணியுடன் விளக்கப் படுகின்றது.

(2) 'டாக் ஹாமர்ஷீல்டும் நெருக்கடி ராஜ தந்திரமும்'—(Dag Hammerskjoeld and Crisis Diplomacy)—ஆசிரியர் ரிச்சர்டு ஐ மில்லர்—உலக அமைதியின் தலை சிறந்த காவலரின் வாழ்க்கையும், எட்டு பயங்கர ஆண்டுகளில் உலக அமைதியை எவ்வாறு பாதுகாத்தார் என்பதையும் இந் நூல் விளக்குகிறது.

(3) 'அமெரிக்காவின் பேரறிவு' (The Genius of America) — ஆசிரியர் சால் கே. பாடோவர் — பதினேறு மிகச் சிறந்த அரசியல் வல்லுநர்கள், சிந்தனையாளர்களின் வாழ்க்கையையும், அமெரிக்க கொள்கைக்கு அவர்களுடைய சிந்தனைகள் எவ்வாறு வழிகோலின என்பதையும் விளக்குகிறது

(4) 'அமெரிக்காவின் எழுத்துலகம்' (Writing in America)—பதிப்பாசிரியர்கள் ஜான் ஃபிஷர், ராபர்ட் பி. சில்வர்ஸ். இந் நூலில் தலை சிறந்த அமெரிக்க எழுத்தாளர்களின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேசன் டிபிள்யூ. கிராஸ் எழுதிய 'நூல்களை நன்கும் பரவலாகவும் பயன்படுத்தல்', எலிஜபத் ஹார்ட்விக் எழுதிய 'இலக்கிய விமர்சனம் தாழ்தல்', ஜான் ஃபிஷர் எழுதிய 'எழுத்தாளரும் அவர்களின் பதிப்பாளர்களும்' என்பவை யாகும்.

இந்த நூல்கள் ஒவ்வொன்றும் சிறப்பு மலிவுப் பதிப்பாக 20 செண்ட் விலை குறிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்.

அண்மையில் வெளிவந்த நூல்கள்

ஜெமினி பிரசுரம்

ஒரே இரத்தம்
—எம். ஏ. அப்பாஸ்

தெய்வங்கள்
—எம். ஏ. அப்பாஸ்

கள்ளத்தோணி
—மூலம்: கே. ஏ. அப்பாஸ்
—மொழி: எம். ஏ. அப்பாஸ்

வள்ளுவர் பண்ணை

இந்தியப் பெரியார்கள்
—மூலம்: டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன்
—மொழி: வி. எஸ். வி. ராகவன்

புன்னகை புத்தக நிலையம்

கற்பனைச் சோலையிலே
—கணேசன் பி. சி.

தொழிற் கல்லூரி, (மதுரை)

டிரான்ஸிச்டர் ரேடியோ
—எம். கான் முகம்மது B. A.

நமது ரேடியோ
—எம். கான் முகம்மது B. A.

புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை-1

போலீஸ்காரன் மகள் 2 00
—பி. எஸ். ராமையா

ஜீவ தாண்டவம் 2 00
—சரோஜினி ஸ்ரீராம்

பாரி நிலையம், சென்னை-1

ஈழத்து வாழ்வும் வளமும் 2 50
—க. கணபதிப் பிள்ளை

குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் I 1 00

குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் II 1 00

குழந்தைக் கவிஞரின் வேடிக்கைப் பாடல்கள் 1 00

ஏ. கே, கோபாலன், சென்னை-5

மத குரு (நோபல் பரிசு) 3 20

மனுதர்ம சாஸ்திரம் 2 00

புத்துயிர் 2 00
—டால்ஸ்டாய்

பாரதி 2 00
—சரத் சந்திரர்

பாரதியார் கவிதைகள் (முழுதும்) 2 00

ஸ்டார் பிரசுரம், சென்னை-5

குழந்தைக் கவியமுது 1 50
—நாக முத்தையா

காணிக்கை 1 75
—குயிலி

குடும்ப மருந்துகள் 0 75
—டி. எஸ். ஜனககுமாரி

இத்தாலியக் கதைகள் 2 50
—(மூலம்) மாக்ஸிம் கார்க்கி
—(தமிழில்) தர்மராஜன்

வீரனே கீரனே! 1 50
—எஸ். நடராஜன்

பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5

ஒலிச் செல்வம் 3 25
—எஸ். மகாராஜன்

செயற்கைச் சந்திரன்களும் ராக்கெட்டுகளும், வானவெளியும் 1 25
—(மூலம்) வில்லி லீ
—(தமிழில்) பா. சவரிமுத்து

ஓநாய்ப் பையன் 1 00
—அரிமழம் இராமகணபதி

பாரதி பதிப்பகம், சென்னை-17

சரித்திரக் கதைக் களஞ்சியம் 4 50
—கோவி மணிசேகரன்

அன்பு மலர்ந்தது 2 50
—எஸி. வி. எஸ்.

கங்கையம்மன் திருவிழா 2 50
—கோவி மணிசேகரன்

பிள்ளைக் கவியமுது 4 00
—தமிழ் முடி

கற்பின் சுடர் நீ 2 75
—தாகூர் தாசன்

காதற் பரிசு 2 50
—தாகூர் தாசன்

வத்தவநாட்டு அரசன் கதை 1 00
—வலம்புரி அண்ணாமலை

நிடதநாட்டு அரசன் கதை 1 50
—வலம்புரி அண்ணாமலை

மாமல்ல புரத்து மங்கையும் சிற்பியும் 10 00
—ஏ. பி. நாகராஜன்

திருமுறை யாத்திரை 1 50
—ஏ. பி. நாகராஜன்

Puthaga Nanban

With Best Compliments

from

The Southern Languages Book Trust
25, Sterling Road
Madras-34

Kindly fill the attached form and return it to us for future supply of the Magazine.

....

SUBSCRIPTION ORDER FORM

To

The General Manager,
Southern Languages Book Trust,
25, Sterling Road,
Madras-. 4.

Dear Sir,

Please enrol me as a subscriber to your quarterly **Futhaga Nanban**. The annual subscription of Rs. 2/- is sent herewith/separately by Postal order/money order-

Yours faithfully,

Signature

From

Name:

Address:

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1965
MADRAS

தமிழ் எழுத்தாளர்
யார் - எவர் ?

*

எழுத்துலகின் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுப் பணியாற்றி வரும் 563 தமிழ் நூலாசிரியர்களை பற்றிய விவாங்களைத் தொகுத்துக் கூறும் முதல் நூல் இதுவே.

தமிழ் எழுத்தாளர்களின் பெயர், முகவரி, அவர்கள் அறிந்த பிற மொழிகள், எழுதியுள்ள நூல்கள், மொழி பெயர்ப்புக்கள், மற்றும் சில குறிப்பிடத்தக்க செய்திகள் ஆகியவற்றை இத்தொகுப்பில் காணலாம்.

இத்தொகுப்பின் இறுதியில், பிற மொழிகளில் நூல் இயற்றியுள்ள தமிழ் எழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் ஆகியோர் பட்டியலும், ஆங்கிலத்தில் எழுத்தாளர் பெயர் அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளன.

*

விலை 1 ரூபாய்
(தபால் செலவு தனி)

*

தென்மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டெர்லிங் ரோட்
சென்னை-34

Edited and Published by V. Sundararaj Naidu, for The Southern Languages Book Trust, 25, Sterling Road, Madras-34 and Printed by G. Bhavanarayana at The Weldun Press, 145, T. H. Road, Madras-21.